வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No.: P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu





Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 25.12.2024 புதன்கிழமை இதழ் : 359 பக்கங்கள் : 12

# இலங்கை அரசின் இனப்படுகொலைக்கு தொடர்ந்து நீதி கோரி வருகிறது கனடா!

## பாராட்டி நன்றி கூறினார் சிறிதரன் எம்.பி.

ஒட்டாவா, டிசெம்பர் 25

**இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்பதைப் பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளாமல் பின்வாங்கும் சர்வதேச அரங்கில், தமிழ்மக்களுக்கு எதிராக இலங்கை அரசினால் நிகழ்த்தப்பட்டது இனப்படுகொலை தான் எனத் தொடர்ந்து கூறி, அதற்கான நீதியையும் கோரிவரும் கனேடிய அரசாங்கத்துக்கு தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தனது நன்றியை வெளிப்படுத்தியுள்ளார்.**



கனேடிய வெளிவிவகார அமைச்சின் அழைப்பின்பேரில் கடந்த வாரம் அந்நாட்டுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன், கடந்த வார இறுதியில் கனடாவின் முடிக்குரிய பூர்வீகக்குடிகள், வடக்கு விவகாரங்கள் மற்றும் வடக்கு பொருளாதார அபிவிருத்தி நிறுவனங்களுக்கான அலுவல்கள் அமைச்சர் ஹறி ஆனந்தசங்கரியை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது இலங்கையில் நடந்தது இனப்படுகொலை தான் என்பதைப் பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளாமல் பின்வாங்கும் சர்வதேச அரங்கில், ஈழத்தமிழர்கள் மீது இலங்கை அரசால் நிகழ்த்தப்பட்டது இனப்படுகொலைதான் என்றும், இறுதிப் போரின்போது 11

# கச்சதீவு குறித்து விவாதிக்க தயார்!

கொழும்பு, டிசெ.24

கச்சதீவு விவகாரம் தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கம் பிரேரணை ஒன்றை முன்வைத்தால் அது தொடர்பில் விவாதிக்க தயார் என அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர் இவ்வாறு கூறினார்.

இலங்கையிடம் இருந்து கச்சத் தீவை மீட்க வேண் டும் என திராவிட முன்னேற்றக் கழகம் 11

# தேசிய பாதுகாப்பு பற்றிய போதிய புரிதல் உள்ளதா?

அரசைக் கேட்கிறார் நாமல்

கொழும்பு, டிசெ. 25

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இராணுவ பாதுகாப்பு நீக்கப்பட்டமை பாரதூரமானது எனவும், அரசாங்கமே அதற்கு பொறுப்பேற்கவேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாதுகாப்பை நீக்குவதற்கான பரிந்துரைகளை வழங்கிய குழுவுக்கு உண்மையில் தேசிய 11



வாசகர்கள், முகவர்கள், விளம்பரதாரர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
**இனிய கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்**

# இலங்கை - இந்தியா இடையிலான இருதரப்பு ஒப்பந்தத்துக்கு அனுமதி

கொழும்பு, டிசெ. 25

இந்தியாவுக்கும் இலங் கைக்கும் இடையிலான இரு தரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் திட்டத்திற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த அமைச்சரவைப் பத்திரம் ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது டன், இதன் மூலம் கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக் காக 2371 மில்லியன் ரூபா வழங்கப்பட உள்ளது.

இத்திட்டத்தின் மூலம் கல்வி, சுகாதாரம், விவசாயம், நீர்ப்பாசனம், சுற்றுலா மற்றும் சமூக வலுவூட்டல் துறைகளில் கவனம் செலுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், இதன் கீழ் 33 திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி, 11

# அரிசி இறக்குமதி அனுமதி நீடிப்பு!

கொழும்பு, டிசெ. 25

தனியார் துறையின் அரிசி இறக்குமதிக்கான அனுமதியை எதிர் வரும் ஜனவரி 10 வரை நீடிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைச் செய்தியாளர் சந்திப்பின் போது அமைச்சரவைப் பேச்சாளரும் 11

# அமைதியான நத்தார் பண்டிகை

கொழும்பு, டிசெ. 25

நாடளாவிய ரீதியில் கிறிஸ்தவ மக்கள் நத்தார் பண்டிகையை நேற்றிரவு அமைதியாக கொண்டாடினர்.

நத்தார் பண்டிகையை முன்னிட்டு தேவாலயங்களில் நேற்றிரவு விசேட ஆராதனைகள் இடம்பெற்றன.

அத்துடன் பல பகுதிகளில் தேவாலயங்களுக்கு அருகே பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

மக்கள் அமைதியான முறையில் நேற்று இரவு தேவாலயங்களில் நடைபெற்ற விசேட ஆராதனைகளில் பங்கேற்றதைக் காண முடிந்தது. (அ)

# யாழ். மாவட்டத்திலும் கடவுச்சீட்டு அலுவலகம்

இளங்குமரன் எம்.பி. உறுதி

யாழ்ப்பாணம், டிசெ. 25

யாழ்ப்பாணத்தில் கடவுச்சீட்டு அலுவலகம் ஒன்றை உருவாக்குவதற்கு தீர்மானித்துள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடு பொருளாதார ரீதியில் பின்னடைவை எதிர் நோக்கியுள்ள நிலையில் அதிகமானோர் 11

# மிகப்பெரிய பொய்யைக் கூறி ஆட்சியமைத்துள்ள அநுர அரசு

ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 25

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தில் மாற்றங்களை ஏற்படுத்தப்போவதாக மிகப்பெரிய பொய்யைக் கூறி அரசாங்கம் ஆட்சியமைத்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். 11

# சுகாதார சேவை அடிப்படை உரிமை; பிரகடனப்படுத்த அரசாங்கம் திட்டம்!

கொழும்பு, டிசெ. 25

புதிய அரசியலமைப்பை வகுக்கும்போது, சுகாதார சேவையைப் பெறுவதற்கான உரிமையை மக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றாகப் பிரகடனப்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. 11

# பாதாள உலக குழுக்கள் முற்றாக ஒடுக்கப்படும்!

கொழும்பு, டிசெ. 25

பாதாள குழுக்களை ஒடுக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே 11

# இந்த வருடத்தில் மட்டும் 554 இந்திய மீனவர் கைது!

கொழும்பு, டிசெ. 25

நாட்டின் கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்த குற்றச்சாட்டில் இந்த வருடத்தில் 554 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை அறிவித்துள்ளது.

இலங்கை கடற்பரப்பிற்குள் இலங்கை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கு மின் கட்டண நிவாரணம் வழங்க திட்டம்

## யாழ். அரச அதிபர் தலைமையில் ஆராய்வு



யாழ்ப்பாணம், டிசெ.25

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்களுக்கு மின் கட்டண நிவாரணம் வழங்கும் திட்டத்தின் கீழ் கணக்கெடுப்பு நடத்தவுள்ள உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தச் செயலமர்வில் தலைமையுரையாற்றிய அரசாங்க அதிபர், சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் உத்தியோகத்தர்களின் கடமைகள் திருப்திகரமாகவுள்ளதாகவும், மனித வாழ்க்கைக்கு பொருளாதார விருத்தி முக்கியமானது எனவும், இத்திட்டத்தின் மூலம் பல குடும்பங்களின் வாழ்க்கை மென்மேலும் ஒளிமயமாகும் எனக் குறிப்பிட்டார். சரியான பயனாளிகளை தெரிவுசெய்வது உத்தியோகத்தர்களின் பொறுப்பு எனவும் அவர் தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்களுக்கு மின் கட்டணத்தில் நிவாரணம் வழங்கும் திட்டத்தில் அகில இலங்கை ரீதியாக தெரிவு செய்யப்பட்ட 09 மாவட்டங்களில் யாழ்ப்பாண மாவட்டமும் உள்ளடங்கப்பட்டுள்ளது. இந்தச் செயல் திட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 1,050 தொழில் முயற்சியாளர்கள் ஆய்வுக்குட்படுத்தப்படவுள்ளனர்.

இச் செயலமர்வில் விசேடமாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆலோசகர் உபாலி தரணகம மற்றும் கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட ஆய்வாளர் நாமல் வீரசேன ஆகியோர் பங்குபற்றி உத்தியோகத்தர்களுக்கு பயனாளிகளை எவ்வாறு தெரிவு செய்வது என்பது தொடர்பான தெளிவூட்டல்களை வழங்கினர்.

சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் உதவிப் பணிப்பாளர் தி. தனஞ்சயன் மற்றும் மாவட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் இந்தச் செயலமர்வில் பங்குபற்றினர். (எ-05)

## பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டி வழங்கல்



யாழ்ப்பாணம், டிசெ. 25

இராணுவத்தின் 51ஆவது படைப் பிரிவின் கீழ் இயங்கும் 513ஆவது பிரிகேட்டின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்கள், கர்ப்பவதிகள் மற்றும் வயோதிபர்களுக்கான உதவிகள் வழங்கும் நிகழ்வு வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனின் பங்குபற்றலுடன் 513 ஆவது பிரிகேட் வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் யகம்பத், கனடாவைச் சேர்ந்த வர்த்தகர் ரஜிகரன் சண்முகரத்தினம், தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பரா. நந்தகுமார், சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளும் கர்ப்பவதிகள் மற்றும் வயோதிபர்களுக்கு உலர் உணவுப் பொதிகளும் வர்த்தகரான ரஜிகரன் சண்முகரத்தினத்தின் நிதி உதவியில் வழங்கப்பட்டன. (எ- 05)

## சண்டிலிப்பாய் சந்தியில் இடம்பெற்ற விபத்தில் கணவன் - மனைவி படுகாயம்!

யாழ்ப்பாணம், டிசெ. 25

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சண்டிலிப்பாய் சந்தியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் கணவனும் மனைவியும் படுகாயம் அடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், அராலி பகுதியைச் சேர்ந்த கணவன் மனைவி இருவரும் குறித்த சந்தியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது அவ்வீதியால் வந்த இன்னொரு மோட்டார் சைக்கிள் அவர்கள் மீது மோதியது. இதன்போது இருவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மற்றைய மோட்டார் சைக்கிளின் சாரதி மானிப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (05)

## உப்பு இறக்குமதிக்கு விலைமனுக் கோரல்

கொழும்பு, டிசெ. 25

உப்பு இறக்குமதி தொடர்பாக இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தினால் சர்வதேச ரீதியில் விலைமனு கோரப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் உப்புக்கு பற்றாக்குறை ஏற்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக 30 ஆயிரம் மெற்றிக் தொன் அயடீன் கலந்த உப்பை இறக்குமதி செய்வதற்குக் கடந்த வாரம் அமைச்சரவை அனுமதி வழங்கியது.

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர், இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தினால் உப்பை இறக்குமதி செய்து உள்ளூர் உப்பு உற்பத்தியாளர்கள் ஊடாக சந்தைக்கு விநியோகிப்பதற்கு அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனம் உப்பு இறக்குமதி செய்வதற்குப் பொருத்தமான நிறுவனங்களிடமிருந்து விலைமனு கோருவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. (அ)

## யாழில் பல குடும்பங்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமம் உதவி




யாழ்ப்பாணம், டிசெ.25

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் மற்றும் நல்லூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 70 குடும்பங்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சண்டிலிப்பாய் மத்தி பிரதேசத்தில் ஜே - 142 கிராம சேவையாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 48 குடும்பங்களுக்கும், நல்லூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சங்கிலியன் தோப்பு பிரதேசத்தில் ஜே -109 கிராம உத்தியோகத்தர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 22 குடும்பங்களுக்கும் இவ்வாறு அத்தியாவசிய உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்த உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் குறித்த பகுதிகளுக்கு நேரில் சென்று வழங்கினார். (எ-2)

## நத்தார் பண்டிகைக்கால வர்த்தகம் மந்த கதியில்!



யாழ்ப்பாணம், டிசெ.25

நத்தார் பண்டிகைக்கால வர்த்தகங்கள் மந்த கதியில் இடம்பெறுவதாக யாழ்ப்பாண நகரப் பகுதி புடைவை வர்த்தகர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருந்தாலும் பொருளாதார ரீதியில் மக்கள் பாதிக்கப்பட்டு இருப்பதால் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு ஆர்வம் காட்டவில்லை. ஆட்சிக்கு வந்த புதிய அரசாங்கத்தாலும் திடீரென எவற்றையும் சரி செய்ய முடியாது. காலப்போக்கில் தான் நிலைகளை ஓரளவு சீராக்க முடியும் எனவும் கூறினர்.

இதுபோன்று தையல் தொழில் செய்பவர்களின் தொழில் நடவடிக்கைகள் மந்த நிலையில் உள்ளதாக அவர்கள் தெரிவித்ததுடன், பட்டாசு வர்த்தகர்களின் வர்த்தகமும் மந்த நிலையில் காணப்படுவதாக கூறினர்.

இருப்பினும், இனிப்பு பண்ட வியாபாரிகளின் வர்த்தகமானது சிறந்த முறையில் இடம்பெறுவதாக அந்தத் தொழிலை மேற்கொள்வோரும் வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் குறைந்தளவு மக்களே பொருட்கள் கொள்வனவில் ஈடுபடுவதை அவதானிக்க முடிந்தது.

# தென்மராட்சியில் தொடர்கிறது சட்டவிரோதமாக மண் அகழ்வு!

## இடங்களை பார்வையிட்டார் இளங்குமரன் எம்.பி.

யாழ்ப்பாணம், டிசெ.25

தென்மராட்சியில் சட்டவிரோதமாக மண் அகழ்வு இடம்பெற்றுள்ள இடங்களை பாராளுமன்ற உறுப்பினர் கணநாதன் இளங்குமரன் பார்வையிட்டார்.

யாழ்ப்பாணம், தென்மராட்சி - கரம்பகம் பிரதேசத்திலுள்ள வீதி மற்றும் விவசாய நிலங்களில் மண் அகழ்வு இடம்பெற்றுவரும் இடங்களை பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் உள்ளிட்ட குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

மிருசுவில் - கரம்பகம் பிள்ளையார் இணைப்பு வீதி மற்றும் விளை நிலங்களில் அண்மைக்காலமாக சட்டவிரோதமாக மண் அகழ்வு இடம்பெற்று வருகிறது. இதனைக் கண்டித்து பிரதேச மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த வீதி நெடுங்காலமாக மணல் வீதியாகவே இருப்பதோடு, பிரதேச விவசாயிகள் தங்களது விவசாய உற்பத்திப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு குறித்த வீதியை பயன்படுத்தி வருகின்ற நிலையில், மண் அகழும் இயந்திரத்தின் உதவி கொண்டு 25இற்கும் மேற்பட்ட டிப்பர்கள் மண், வீதியிலும் வீதி ஓரங்களிலும் அகழப்பட்டுள்ளன.

இவ்வாறாக, குறித்த பிரதேசத்தில் சட்டவிரோத மண் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெற்றுவதாகவும், அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இந்த நிலையில், இளங்குமரன் எம். பி. சாவகச்சேரி பிரதேச செயலாளர் உஷா சுபலிங்கம், கரம்பகம் கிராம அலுவலர் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று மண் அகழ்வு இடம்பெற்றுள்ள இடங்களை பார்வையிட்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
25.12.2024 புதன்கிழமை
பிலவ வருடம், மார்கழி 10

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

## ஈஸ்டரில் கொல்லப்பட்டவர்களுக்கான நீதி

அநுர குமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கம் பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்வாறு நீதியைப் பெற்றுக் கொடுக்கப் போகின்றது? இதற்கான பதிலை பலரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். கர்தினால் மல்கம் ரஞ்சித் நம்பிக்கையோடு அவ்வப்போது கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றார். இலங்கையில் சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாத ஜிகாதி அமைப்புக்களின் செல்வாக்கு இருந்தது என்பதில் சந்தேகமில்லை ஆனால், அதனை எதிர் கொள்வதற்கான ஒரு பொறிமுறை இலங்கை புலனாய்வு கட்டமைப்பிடம் இருந்ததா என்பதுதான் கேள்வி. அண்மையில் கூட அருகம்பேயில் தங்கியிருந்த இஸ்ரேலியர்களை இலக்கு வைத்து தாக்குதல் நடவடிக்கையொன்று திட்டமிடப்பட்டிருந்ததாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இலங்கையின் படைத்துறையை பொறுத்தவரையில் பயங்கரவாத முறியடிப்பு என்றால் அது கொட்டி ரஸ்தவாதவுக்கு எதிரானது மட்டும் தான். இப்போதும் கூட செத்துப்போன விடுதலைப் புலிகள் வாதம் உயிர்த்துவிடுமா என்பதாகவே பெலிசாரினதும், புலனாய்வுத் துறைகளினதும் அணுகுமுறைகளாக இருக்கின்றது. கொட்டி என்னும் சொல்லைத் தவிர பயங்கரவாதத்தின் சர்வதேச பரிமாணங்கள் அதன் புதிய வளர்ச்சி பற்றிய புரிதல் பெரியளவில் இலங்கை புலனாய்வுக் கட்டமைப்புக்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. இலங்கையின் ஊடக மட்டத்திலும் சர்வதேச பயங்கரவாதம் மற்றும் இந்து சமுத்திர பிராந்தியத்தில் அதன் வளர்ச்சிப் போக்கு பற்றி பெரியளவில் விழிப்புணர்வு இருப்பதாகத் தெரியவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் இலங்கையில் ஈஸ்டர் தாக்குதலை அவர்களால் வெற்றிகரமாக முன்னெடுக்க முடிந்தது.

ஈஸ்டர் தாக்குதல் ஒரு சர்வதேச பயங்கரவாதத் தாக்குதல். இந்தத் தாக்குதலில் வெளிநாட்டவர்கள் உள்ளடங்கலாக 250 இற்கும் அளவிலான பொது மக்கள் கொல்லப்பட்டனர். இதிலுள்ள முக்கியமான விடயம் இந்தத் தாக்குதல் இடம்பெற்றதைத் தொடர்ந்து. ஐந்து வருடங்களாக இருக்கின்றாரா அல்லது இல்லையா என்று அறியமுடியாமல் இருந்த, ஐ.எஸ்.ஐ.எஸ். எனப்படும் ஆபத்தான சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பின் தலைவர் அபூபக்கர் அல் பக்தாதி மீண்டும் வெளியுலகிற்கு தனது முகத்தை காண்பித்தார். இலங்கைத் தாக்குதலுக்கு உரிமை கோருவதன் ஊடாக தாங்கள் மீண்டும் சர்வதேச ரீதியில் இயங்க ஆரம்பித்துவிட்டதான செய்தியை வெளிப்படுத்தினார். அமெரிக்க தலைமையிலான படைகள் சிரியாவை தளமாகக் கொண்டு இயங்கிய இஸ்லாமிய அரசை நிர்மூலமாக்கியதைத் தொடர்ந்தே பக்தாதி தலைமறைவானார். அவ்வாறாயின் பக்தாதி மீண்டும் வெளியில் வரும் தருணமொன்றை இலக்காகக் கொண்டே இந்தத் தாக்குதல் இலங்கையில் திட்டமிடப்பட்டிருக்கின்றது.

இவ்வாறானதொரு தாக்குதலுக்கான நீதியை அநுரகுமார அரசாங்கத்தினால் எவ்வாறு பெற்றுக் கொடுக்க முடியும் ஆனால், இது போன்ற விடயங்களில் இலங்கையின் கட்டமைப்புக்களின் அசமந்தப் போக்குகளால் அல்லது சுயநல அரசியலுக்காக கண்டும் காணாமல் இருந்திருந்தால் அது தொடர்பில் அரசாங்கம் விசாரணைகளை மேற்கொள்ளலாம்தான். அதுவும் முடியுமா என்பதுதான் கேள்வி.

இந்தத் தாக்குதல் இடம்பெற்றதைத் தொடர்ந்து இலங்கையின் கர்தினால் மல்கம் ரஞ்சித், அந்த ஒரு கருத்தை வெளியிட்டிருந்தார் - அதாவது, இதற்கு பின்னால் பலம் பொருந்திய நாடு ஒன்று இருப்பதாகவும் அது தனக்குத் தெரியும் என்றும் குறிப்பிட்டிருந்தார். மல்கம் ரஞ்சித் தற்போது புதிய போப்புக்கான போட்டியிலும் ஈடுபடப் போவதாக செய்திகள் வெளிவருகின்றன. மல்கம் ரஞ்சித்துக்கு அந்த நாட்டை தெரியுமென்றால், அநுர அரசாங்கம் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணையை முதலில் கர்தினால் மல்கம் ரஞ்சித்திலிருந்துதானே ஆரம்பிக்க வேண்டும்.

# கிறிஸ்து பிறப்பு ஒரு புதிய விடியல்!

அருட்பணி ஜீவா போல் அ.ம.தி.



கிறிஸ்து பிறப்பு விழா ஆண்டுதோறும் மார்கழித் திங்கள் 25ம் நாள் உலகெங்கும் இன, மொழி, சமய வேறுபாடின்றி கொண்டாடப்படுகின்றது. 'காலம் ஒரு நாள் மாறும், நம் கவலைகள் யாவும் தீரும்' என்ற எதிர்நோக் கோடு மக்கள் காலா காலமாக கடவுள் நம் மத்தியில் வருவார் என்று காத்திருந்தார்கள். அவர் எப்படிப்பட்டவராய் இருப்பார் என்பதை இறைவாக்கினர்கள் காலத்திற்கு காலம் மக்கள் எதிர்கொண்ட பிரச்சினை களின் அடிப்படையில் சித்தரித்தார்கள். இயேசு பிறப்பின் முன்னறிவிப்பின் போது வானதூர் மரியாளிடம் பின்வருமாறு கூறி னார், "இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர்; அவருக்கு இயேசு எனப் பெயரிடு வீர், அவர் பெரியவராய் இருப்பார், உன்னத கடவுளின் மகன் எனப்படுவார். அவருடைய தந்தை தாவீதின் அரியணையை ஆண்டவ ராகிய கடவுள் அவருக்கு அளிப்பார்" (லூக்கா 1:31-32). இயேசு என்றால் மீட்பர் என்று பொருள் படும். கடவுளுடைய வருகையை அடிமை வாழ்வில் இருந்து மீட்க வல்லவரான ஆட்சியாளராக எண்ணினார்கள்.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் நிகழ்வுகளை எழுதி வைத்த நற்செய்தியாளர்கள் தாவீதின் ஊராகிய பெத்லகேமில் இயேசு பிறந்தார் என்று கூறுவதன் வழியாக அரச பரம் பரையில் தோன்றினார் என்று நிரூபித்தார்கள். உண்மையில் அவர் அரசன் தான். அவர் ஒரு மாவீரனும் கூட. இருப்பினும் அவருடைய பிறப்பும் வாழ்வும் மிக எளிமையானதாகவும், மக்களின் பிரமாண்டமான எதிர்பார்ப்புக்கு முரணானதாகவும் விளங்கிற்று.


இவ்வுலகில் வாழும் மக்கள் தனித்தும் கூட்டாகவும் பல விதமான அடிமைத்தனங்களுக்குள் சிக்குப்பட்டு இருப்பவர்களை படைப்பலத்தோடு வரும் ஆட்சியாளர்கள் மீட்க முடியாது என்பதை கிறிஸ்துவினுடைய பிறப்பும் வாழ்வும், போதனையும் பணியும் தெள்ளத்தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. 'அமைதிக்கான யுத்தம்' என்ற போர்வையில் கோஷம் எழுப்பி வல்லரசுகள் சிறிய நாடுகளை ஆக்கிரமிப்பது ஒரு நாளும் அமைதியை கொணராது. மக்கள் உரிமைக்காக போராடுவதற்கு ஆயுதங்களை உற்பத்தி செய்வதும் போர்படைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதும் ஒருபோதும் விடுதலையைக் கொணராது. குடும்ப உறவுகள் மத்தியிலும் அதிகாரத் தையும் கோப உணர்ச்சிகளையும் அதிகரித்து சண்டை போடுவதால் நின்மதியை பெற முடியாது.

நான் இவ்வுலகிற்கு வந்தது நீங்கள் வாழ்வு பெறும்பொருட்டும் அதை நிறைவாக பெறும் பொருட்டே ஆகும் என்று தமது வருகையின் நோக்கத்தை இயேசு தெளிவாக எடுத்தியம்பியுள்ளார். காரிருளில் இருந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள் என்று எசாயா இறைவாக்கினர் முழங்கியவாறு கிறிஸ்து இயேசுவினுடைய பிறப்பு இவ்வுலகிற்கு நம்பிக்கையையும் புத்துணர்வையும் புதிய விடியலையும் பிறப்பிக்கின்ற வரலாற்று நிகழ்வாக அமைந்தது.

ஆணவத்தையும், ஊழல் நிறைந்த செல்வாக்கையும், சுகபோக வாழ்வையும் அடுத்திருப்பவர்களை அடிமைப்படுத்தி ஊழலும் அநீதமும் மேலானதாகக் கொண்ட ஆட்சியாளர்களால் அமைதியையும் விடுதலை வாழ்வையும் ஏற்படுத்த முடியாது என்று கிறிஸ்துவினது பணி எமக்கு தெளிவுபடுத்துகின்றது. மாறாக அன்பும் பரிவும் புரிந்துணர்வும் அரவணைப்பும் கொண்ட அணுகுமுறையினால் இவ்வுலகில் இறையாட்சியை நிலைநாட்ட தம் உயிரையும் அர்ப்பணித்தார் இயேசு. இவ்வாறு சுயநலன்களினாலும் குறுகிய மனப்பான்மையினாலும் பேராசையினாலும் அடிமைப்படுத்தப்பட்டிருக்கின்ற மனிதரை மீட்பதற்காக தேடும் தெய்வமாக மனித உள்ளங்களை நாடி வருகிறார் நம் கடவுள். கடவுளின் வியத்தகு செயல்களை தம் வாழ்வில் கண்டுகொண்ட குருவும் இறைவாக்கினருமான செக்கரியா பின்வருமாறு இறை புகழ் பாடினார், "இருளிலும் இறப்பின் பிடியிலும் இருப்போர்க்கு ஒளி தரவும், நம்முடைய கால்களை அமைதி வழியில் நடக்கச் செய்யவும் நம் கடவுளின் பரிவுள்ளத்தாலும் இரக்கத்தாலும் விண்ணிலுருந்து விடியல் நம்மைத் தேடி வருகிறது" என்றுரைத்தார்.

கிறிஸ்துவினது பிறப்பு மனித குலத்திற்கு ஓர் புதிய விடியல். அது ஒரு அமைதியின் விழா, மகிழ்சியின் விழா, நம்பிக்கையின் விழா, நல்லுறவுகளின் விழா. விண்ணிலுருந்து மண்ணிற்கு வந்த கடவுள் மனித உணர்வுகளையும் துன்பங்கயையும் தம்மகத்தே ஏற்று மனிதரோடு மனிதரானார். கடவுள் மனிதரானார் என்றால் மனிதரை புனிதராக்குவதற்கே. தெய்வீக சாயலைக் கொண்ட மனிதர் ஒவ்வொரு வரும் கிறிஸ்து பிறப்பு விழாவை கடவுளை நோக்கிய பயணத்தில் மீண்டும் காலடி பதிப்ப தற்கு ஓர் அரிய வாய்ப்பாக கொள்ளுவோம். எனவே கிறிஸ்துவின் பிறப்பு விழாவை மகிழ்ந்து கொண்டாடும் நல்லுள்ளம் கொண்டோர் அனைவருக்கும் இவ்விழா ஆண்டவர் இயேசுவின் அன்பும் அருளும் நிறைவாக கிடைக்கும் பெருவிழாவாகட்டும்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ராசிபலன்

டிசம்பர் – 25 புதன்கிழமை
குரோதி வருடம் – மார்கழி 10
நல்ல நேரம்: 9.00 – 10.30
ராகு காலம்: 12.00 – 1.30
திதி : தசமி



**மேடம்**
வாகன வசதிப் பெருகும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். உறவினர் நண்பர்கள் உங்கள் உதவியை நாடுவார்கள். பெருந்தன்மையுடன் நடந்துக் கொள்ளும் நாள்.

**இடபம்**
சேமிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மிதுனம்**
பயணங்களால் பயனடைவீர்கள். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் வந்து போகும். பணப் பற்றாக்குறையை உழைப்பால் உயரும் நாள்.

**கடகம்**
விருந்தினர் வருகை அதிகரிக்கும். சொத்துப் பிரச்னைக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன் பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். கணுக்கால் வலிக்கும். வளைந்து கொடுத்து செல்ல வேண்டிய நாள்.

**துலாம்**
வேலைச்சுமையால் உடல் அசதி மனச்சோர்வு வந்து நீங்கும். வாகனத்தை எடுக்கும் முன் எரிபொருள் இருக்கிறதா என பார்த்துக் கொள்ளுங்கள். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம்.

**விருட்சிகம்**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். சபைகளில் மரியாதை கிடைக்கும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட் டுக் கொடுப்பீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**தனுசு**
பிள்ளைகளின் பொறுப்புணர்வு அதிகமாகும். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வீடு, வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள்.

**மகரம்**
இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். இழுபறியாக இருந்த வேலைகள் முடிவடையும். விலகி நின்ற உறவுகள் விரும்பி வந்து பேசுவார்கள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான வேலைகள் பல பார்க்க வேண்டி வரும். மற்றவர்களின் பிரச்னையில் தலையிடுவதால் வீண் பழிச்சொல் ஏற்படும்.

**மீனம்**
மனைவி வழியில் ஆதரவு பெருகும். ஆடை ஆபரணம் சேரும். தாயாரின் உடல் நிலை சீராகும். தன் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள்.


# யாழ். நகர வர்த்தக நிலையங்களில் சுகாதார துறையினர் பரிசோதனை

யாழ்ப்பாணம், டிசெ.25

பண்டிகை காலத்தை முன்னிட்டு நேற்றையதினம் யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் உள்ள உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் சுகாதாரப் பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

28 உணவகங்கள் மற்றும் இதர வர்த்தக நிலையங்கள் உள்ளடங்கலாக இந்தப் பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதில் 11 கடைகளில் குறைபாடுகள் இருப்பது அவதானிக்கப்பட் டன. அந்த வர்த்தக நிலையங் களில் வியாபா ரத்துக் காக வைக்கப்பட்டிருந்த 9 வகை யான உண வுப் பொருட் கள் அழிக்கப் பட்டன. அத்துடன் நான்கு கடைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள் வதற்காக வழக்கு பதிவு செய் யப்பட்டது.



வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிப்பின் பேரில், சுகாதார வைத்திய அதிகாரி, தொற்று நோய்த் தடுப்பு வைத்திய அதிகாரி, தாய்சேய் நல வைத்திய அதிகாரி மற்றும் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து இந்த பரிசோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

(எ-05)

# யாழில் உண்மையின் தரிசனம் நாட்டுக்கூத்து

யாழ்ப்பாணம், டிசெ.25

காவேரி கலா மன்றத்தின் தயாரிப்பில் உண்மையின் தரிசனம் நாட்டுக்கூத்து நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

காவேரி கலா மன்றம் கிறிஸ்து பிறப்பு நிகழ்வை பண்பாட்டு விழுமியங்களோடு இணைத்து கூத்து வடிவத்தில் கடந்த 26 வருடங்களாக வருடம் தோறும் நடத்தி வருகிறது.



அந்த வகையில் இந்த வருடமும் உண்மையின் தரிசனம் யாழ்ப்பா ணத்தில் மேசியா பூரண சுவிசேஷ சபை என்ற தேவால யத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நாட்டுக்கூத்து நிகழ்வு காவேரி கலா மன்றத்தின் இயக்குநர் யோசுவாவின் எழுத்தாக்கம் மற்றும் நெறியாக்கத்தில் நடைபெற்றது.

(எ-02-05)

# வடமாகாண ஆளுநருடன் கட்டளை தளபதி சந்திப்பு

யாழ்ப்பாணம், டிசெ.25

வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனை யாழ். மாவட்ட இராணுவக் கட்ட ளைத் தளபதியாக பொறுப் பேற்றுள்ள மேஜர் ஜெனரல் யகம்பத் யாழில் உள்ள ஆளுநர் செயலகத்தில் சந்தித்துக் கலந் துரையாடினார்.



யாழ். மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய விட யங்கள் தொடர்பில் விரைவில் சந்தித்துக் கலந்துரை யாடுவோம் என கட்ட ளைத்தளபதி ஆளுநரிடம் குறிப்பிட்டார். (எ- 02)

# வலி. வடக்கில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.25

விதையனைத்தும் விருட்சமே அமைப்பு, கருகம்பனை பொது அமைப்புகளுடனும் வலி. வடக்கு பிரதேச சபையுடனும் இணைந்து நடத்தும் மாபெரும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையானது எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி முதல் நடைபெறவுள்ளது.

கருகம்பனை கிராமத்தை உள்ளடக்கிய பகுதிகளான நகுலேஸ்வரம், இளவாலை வடக்கு, இளவாலை வடமேற்கு, வித்தகபுரம் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கிய பகுதிகளில் இந்தச் செயல்பாடு முன்னெடுக்கப் படவுள்ளது. (எ-05)

# சிறுப்பிட்டியில் நவநாத சித்தர் குருபூஜை

யாழ்ப்பாணம், டிசெ.25

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நடத் தப்பட்டு வரும் திருவாசக சிறப்பு சொற்பொழிவும், மாதந்தோறும் ஈழத்து சித்தர்கள் குரு பூஜை விழாவும் தொடர் 09

நவநாத சித்தர் சுவாமிகள் குருபூஜை விழா சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு சிறீ நாகதம்பிரான் ஆலயத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

நவநாத சித்தர் சுவாமிகள் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும், இளஞ்சைவப்புலவர் க. கயிலைவாசனால் "வணங்க வேண்டிய நவநாத சித்தர் சுவாமிகள்" என்னும் விடயப்பொருளில் சொற்பொழிம் நடைபெறவுள்ளது.

(எ)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி

யாழ்ப்பாணம், டிசெ.25

புங்குடுதீவில் வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு சுவிட்சர்லாந்து நாட்டில் இயங்கிவருகின்ற புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றி யத்தினரால் முதல்கட்டமாக இரண்டரை இலட்சம் (250000) ரூபாய் நிதியுதவியில் 67 குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள், பாய், சவர்க்காரம், குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான பாவனைப் பொருட்கள் மற்றும் கிருமிநாசினி பொருட்களான லைசோல், குளோரின் போன்றன வழங்கப்பட்டன.



(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை புத்தாண்டுக்கு முன்னர் உள்ளூராட்சித் தேர்தல் நடக்காது!

## அடித்துக் கூறுகிறார் கம்மன்பில

கொழும்பு, டிசெ. 25

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலை சித்திரை புத்தாண்டுக்கு முன்னர் நடத்துவது சாத்தியமற்றது. மார்ச் - ஏப்ரல் வரையான காலப்பகுதியில் சாதாரண தர பரீட்சை நடைபெறவுள்ளதால் மே மாதமளவில் தான் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தமுடியும் என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.**

கொழும்பில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-சித்திரை புத்தாண்டுக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஊடகங்களுக்கு குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதி குறிப்பிடுவதை போன்று வெகுவிரைவாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதாக இருந்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுக்களை முதலில் இரத்துச் செய்யவேண்டும்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுத்தாக்கல்களுக்கு அமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதில் சிக்கல் காணப்படுவதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

புதிதாக வேட்புமனு கோருமாறு அரசியல் கட்சிகள் உட்பட பல தரப்பினர் வலியுறுத்தியதற்கமைய வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கு கடந்த 03 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

வேட்புமனுக்களை இரத்துச் செய்யும் வகையிலான சட்ட வரைவு விரைவாக தயாரிக்கப்பட்டு, எதிர்வரும் 30 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டு முதல் வாசிப்புக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அந்த சட்டமூலத்தை உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவதற்கு 14 நாட்கள் காலவகாசம் வழங்கப்படவேண்டும்.

நீதிமன்றத்தின் வியாக்கியானத்துக்கு பின்னர் இந்த சட்டமூலத்தை பெப்ரவரி மாதம் நிறைவேற்றிய மறுதினமே தேர்தலை நடத்த முடியாது. தேர்தல் பணிகளை முன்னெடுக்க தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு போதுமான காலவகாசம் வழங்க வேண்டும்.

சட்ட திருத்தத்தை நிறைவேற்றி, தேர்தல் பணிகளை விரைவாக முன்னெடுத்தாலும் சித்திரை புத்தாண்டுக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது சாத்தியமற்றது .

ஏனெனில் மார்ச் - ஏப்ரல் வரையான காலப்பகுதியில் சாதாரண தர பரீட்சை நடைபெறவுள்ளது.ஆகவே 2025 ஆம் ஆண்டு மே மாதமளவில் தேர்தலை நடத்த முடியும் -என்றார். (அ)

# மின்சாரக் கட்டண திருத்தம் குறித்து மக்கள் கருத்தறியும் அமர்வு 27 இல்!

கொழும்பு, டிசெ. 25

மின்சாரக்கட்டண திருத்தம் தொடர்பில், பொது மக்களின் கருத்துக்களைப் பெறுவது தொடர்பான வாய்மூல அமர்வு, எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த அமர்வுகளில், கட்டண திருத்தம் தொடர்பாக, மின்சார சபை சமர்ப்பித்த முன்மொழிவு மற்றும் பொது பயன்பாட்டு ஆணைக்குழு சமர்ப்பித்த பதில் முன்மொழிவு குறித்து, மக்களின் கருத்துக்கள் பெறப்படவுள்ளன.

மின்சார சபை, அடுத்த 6 மாதங்களுக்கு, கட்டண திருத்தம் மேற்கொள்ளக்கூடாது என, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம், அண்மையில் முன்மொழிவுகளை சமர்ப்பித்தது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, பதில் பிரேரணைகளை முன்வைக்கும் போது, மின்சாரக் கட்டணத்தை, 10 முதல் 20 வீதம் வரை குறைக்க முடியும் என குறிப்பிட்டது.

இந்த முன்மொழிவுகள் தொடர்பில், எழுத்து மூலம் மக்களின் கருத்துக்களைப் பெறும் நடவடிக்கை, கடந்த 17 ஆம் திகதி ஆரம்பமானதுடன், வாய்மூல அமர்வு, எதிர்வரும் 27 ஆம் திகதி, கண்டி பிரதேசத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (அ)

# பாதுகாப்பற்ற மின் வேலிகளால் 50 காட்டு யானைகள் உயிரிழப்பு!

கொழும்பு, டிசெ. 25

2024 ஆம் ஆண்டு முதல் அனுமதியற்ற மின்சார வேலிகள் மற்றும் கம்பிகள் பாவனையால் சுமார் 50 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டவிரோத செயல்கள் தொடர்பாக ஏற்கனவே உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்படி, 0112118767 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது 1987 என்ற துரித இலக்கத்தினூடாக இலங்கை மின்சார சபைக்கு உடனடியாக அறிவிக்குமாறு அந்த அறிவிப்பில் மேலும்குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# அந்நிய செலாவணியை அதிகரிக்க முன்னெடுக்கவுள்ள திட்டம் என்ன?

## அரசாங்கத்திடம் திஸ்ஸ கேள்வி

கொழும்பு, டிசெ. 25

நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு 2028ஆம் ஆண்டாகும் போது 15 பில்லியன் டொலராக அதிகரிக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். அதே ஆண்டிலிருந்து நாம் கடனையும் மீள செலுத்த ஆரம்பிக்க வேண்டும். இதற்காக அரசாங்கம் நடைமுறைப்படுத்தவுள்ள வேலைத்திட்டம் என்ன என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க கேள்வியெழுப்பினார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இலங்கை வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுள்ளதாக பிட்ச் ரேட்டிங் நிறுவனம் அறிவித்துள்ளமை மகிழ்ச்சிக்குரியதாகும். வங்குரோத்தடைந்த நாடு என்ற முத்திரையுடன் தொடர்ந்தும் பயணிக்க முடியாது.

சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கமைய செயற்பட்டதன் காரணமாகவே எம்மால் இந்த வெற்றியை அடைய முடிந்தது.

அதற்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவர் தலைமையிலான அரசாங்கத்துக்கு நன்றி கூற வேண்டும்.

2028ஆம் ஆண்டாகும் போது எமது அந்நிய செலாவணி இருப்பு 15 பில்லியன் டொலராக அதிகரிக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார பாராளுமன்றத்தில் குறிப்பிட்டிருந்தார்.

வெளிநாட்டு கடனை மீள செலுத்த ஆரம்பிக்கும் நிலையில் இந்த இலக்கை அடைய வேண்டியது அத்தியாவசியமானதாகும்.

எனவே இதற்கு அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டம் என்ன என்பது தொடர்பில் அறிய விரும்புகின்றோம்.

தேர்தலுக்கு முன்னர் சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் கடுமையான விமர்சனங்களை முன்வைத்த தேசிய மக்கள் சக்திக்கு தற்போது யதார்த்தமான சூழலை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டுள்ளது.

ஆனால் பிரதான எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி கோட்டாபய ஆட்சி காலத்திலிருந்தே நாணய நிதியத்துடன் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வந்தது.

அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு தேசிய மக்கள் சக்தி தனியார் மயப்படுத்தல் என்ற வசனத்தை மிகப் பரவலாகப் பயன்படுத்தியது.

தனியார் பல்கலைக்கழகங்கள் உள்ளிட்டவற்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போது தேசிய மக்கள் சக்தி அவற்றை கடுமையாக எதிர்த்தது.

ஆனால் இன்று அவர்களுக்கு அதனை எதிர்க்க முடியுமா? உலகத்துடன் இணைந்து பயணிக்க வேண்டும் என்பதே யதார்த்தமாகும்-என்றார். (அ)

# தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவியை பங்கு போட்டுக் கொள்ளப்போதில்லை!

## கூறுகிறார் பைசர் முஸ்தபா

கொழும்பு, டிசெ. 25

சுதந்திர கட்சி மூலம் எனக்கு கிடைத்திருக்கும் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை யாருடனும் பங்கு போட்டுக்கொள்ளப் போவதில்லை. அவ்வாறான எந்த நிபந்தனையும் எனக்கு போடப்படவும் இல்லை என புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப்பட்டியல் உறுப்பினர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள அவரது காரியாலயத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பாராளுமன்ற தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணியுடன் சுதந்திர கட்சி மேற்கொண்டிருந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் அந்த கட்சிக்கு கிடைக்கப் பெற்ற இரண்டு தேசியப்பட்டியல் பதவியில் ஒன்று எனக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. தேசியப்பட்டியல் பதவியை எனக்கு வழங்கப்பட வேண்டும் என சுதந்திர கட்சியே எனது பெயரை பரிந்துரை செய்திருந்தது. அதன் பிரகாரமே எனக்கு இந்த தேசியப்பட்டியல் கிடைக்கப் பெற்றது.

ஆனால் எனக்கு கிடைக்கப் பெற்ற தேசியப்பட்டியல் குறிப்பிட்ட ஒரு காலத்துக்கு பின்னர் வேறு ஒரு உறுப்பினருக்கு வழங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடனே எனக்கு வழங்கப்பட்டுள்ளதாக சிலர் தெரிவித்து வருகின்றனர். அவ்வாறு எந்த நிபந்தனையும் எனக்கு விதிக்கப்படவில்லை. எனக்கு கிடைக்கப் பெற்றிருக்கும் இந்த பாராளுமன்ற உறுப்பினர் பதவி அடுத்துவரும் 5வருடங்களுக்கு எனக்குரியதாகும் இதில் யாருடனும் நான் பங்குபோடப்போவதில்லை.

அத்துடன் புதிய ஜனநாயக முன்னணியுடன் 4 கட்சிகளே ஒப்பந்தம் செய்திருந்தன. அந்த கட்சிகளில் பெரும்பான்மையான கட்சிகள் தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவிக்கு எனது பெயரை பரிந்துரை செய்திருந்தன. அவ்வாறு இல் லாமல் தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவியை பெற் றுக் கொள்ள நான் ஒருபோதும் போராடவில்லை.-என்றார். (அ)

# பட்டாசு தொழில் வீழ்ச்சி!

கொழும்பு, டிசெ. 25

பண்டிகைக் காலம் நெருங்கி வருகின்ற நிலையில் நாட்டில் தற்போது பட்டாசு உற்பத்தி தொழிற்துறை பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாக பட்டாசு உற்பத்தியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

பட்டாசு உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் தினேஷ் பெர்னாண்டோ ஊடகங்களுக்கு கருத்துரைக்கையிலே இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

நாட்டில் தற்போது பட்டாசு உள்ளிட்ட கேளிக்கை பொருட்களுக்கான கேள்வி குறைவடைந்துள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலை மையப்படுத்திக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட பட்டாசுகளில் 90 சதவீதமானவை விற்பனை செய்யப்படாமல் எஞ்சியுள்ளன.

அப்போது உற்பத்தி செய்யப்பட்ட பட்டாசுகளை நத்தார் பண்டிகை மற்றும் புதுவருடப் பிறப்பின் போது பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சிலர் அனுமதிப்பத்திரம் பெறாமலும் சில தரமற்ற பட்டாசுகளை உற்பத்தி செய்து குறைந்த விலைக்கு விற்பனை செய்து வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த நிலையில் - உற்பத்தி செய்யப்பட்ட பட்டாசுகளை, அவற்றுக்கான உற்பத்தி செலவு களையேனும், மீளப்பெறுவ தற்கு அவற்றைக் குறைந்த விலையில் சந்தைக்கு விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை சில உற்பத்தியாளர்கள் முன்னெடுத்துவருவதாக பட்டாசு உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் தினேஷ் பெர்னாண்டோ தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் ஜனாதிபதிகளுக்கு உரிய பாதுகாப்பை உறுதிப்படுத்தினோம்!

## பிரதி அமைச்சர் சுனில் வட்டகல

கொழும்பு, டிசெ. 25

**முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னரே பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இராணுவத்தினர் சேவையில் இருந்து மீளழைக்கப்பட்டுள்ளனர். ஆறு மாதத்துக்கொரு முறை பாதுகாப்பு விடயங்கள் மீள் பரிசீலனை செய்யப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் பிரதி அமைச்சர் சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்தார்.**

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு சேவையில் இருந்து இராணுத்தினர் மீளழைக்கப்பட்டு பொலிஸார் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அரசியல் பழிவாங்களுக்காக முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு குறைக்கப்பட்டது என்று குறிப்பிடுவது அடிப்படையற்றது. முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னரே பாதுகாப்பு பணியில் இருந்த இராணுவத்தினர் சேவையில் இருந்து மீளழைக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு பலவீனப்படுத்தப்பட்டுள்ளது என்று அரசியல் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் தரப்பினர் முறையான காரணிகளை குறிப்பிட வேண்டும். ஒட்டு மொத்த மக்களின் பாதுகாப் பையும் உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசாங் கத்துக்கு உண்டு.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு மற்றும் இதர சலுகைகள் குறித்து எதிர்வரும் வாரமளவில் உறுதியான தீர்மானம் எடுக்கப்படும். முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானம் ஆறு மாத காலத்துக்கு ஒருமுறை மீள்பரிசீலனை செய்யப்படும். முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்கு போதுமான அளவில் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்-என்றார். (அ)

# அரசியல் கலாசாரத்தை தூய்மைப்படுத்தும் வேலைத்திட்டங்களுக்கு முழு ஒத்துழைப்பு!

## தயாசிறி ஜயசேகர அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 25

இலங்கையிலுள்ள அரசியல் கலாசாரத்தை தேசிய மக்கள் சக்தி தூய்மைப்படுத்துமானால் அதற்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்க நாம் தயாராகவுள்ளோம். ஆனால் 159 ஆசனங்களைப் பெற்றுக் கொண்ட மமதையில் செயற்பட்டால் 5 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் இவர்களையும் மக்கள் வீடுகளிலேயே அமர்த்துவதற்கு தயங்கப் போவதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

குருநாகலில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-நாட்டின் அரசியல் போக்கினை மிக ஆழமாகவும் உன்னிப்பாகவும் அவதானிக்க வேண்டும். ஒருநாளும் கண்டிராத நூற்றுக்கும் மேற்பட்ட முகங்களை மக்கள் இம்முறை பாராளுமன்றத்துக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

உலகில் இல்லாதவாறு வெற்றி பெற்ற தேசிய மக்கள் சக்தியைப் போன்று, நாம் உலகில் இல்லாதவாறு படுதோல்வியை சந்தித்தோம்.

ஆனாலும் நாம் 25 - 30 இலட்சம் மக்களின் நிலைப்பாடுகளை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாகவுள்ளோம். எனவே பாராளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்தியின் தனி நிலைப்பாட்டுக்கு மாத்திரம் இடமளிக்க வேண்டும் என்று எண்ணக் கூடாது. எமது நிலைப்பாடுகளுக்கும் இடமளிக்கப்பட வேண்டும்.

இலங்கையிலுள்ள அரசியல் கலாசாரத்தை தேசிய மக்கள் சக்தி தூய்மைப்படுத்துமானால் அதற்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்க நாம் தயாராகவுள்ளோம்-என்றார். (அ)

# பங்களாதேஷ்க்கு செல்லும் மின்சாரத்தை இலங்கைக்கு விற்பதற்கு ஆராயும் அதானி

கொழும்பு, டிசெ. 25

அதானி நிறுவனம் இந்தியாவின் ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள கோடா மின்னுற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் பங்களாதேஷ்க்குச் செல்லும் மின்சாரத்தை, இலங்கை போன்ற அண்டை நாடுகளுக்கு விற்பனை செய்வதற்கான வழிகளை ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் காரணமாக சில சிக்கல்களுக்கு மத்தியில் குறித்த மின்னுற்பத்தி நிலையத்திலிருந்து பங்களாதேஷ்க்கு மின்சாரம் வழங்கும் அளவை அதானி நிறுவனம் குறைத்துள்ளது.

இந்தத் திட்டத்தைத் தக்கவைக்க, உள்நாட்டுச் சந்தையில் மின்சார விற்பனையை இந்திய அரசாங்கம் சமீபத்தில் அனுமதித்திருந்தாலும், இந்த விஷயத்தில் ஒரு புதிய பரிமாற்ற பிணைப்பு அவசியம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் குறித்த மின்னுற்பத்தி நிலையத்திலிருந்து இலங்கைக்கு மின்சாரம் விற்பனை செய்வதற்கு பங்களாதேஷ் அரசாங்கத்தின் அனுமதி தேவைப்படும் என பங்களாதேஷின் மின்சக்தி, வலுசக்தி மற்றும் கனிம வளங்கள் அமைச்சகத்தின் ஆலோசகர் முஹம்மது பௌசுல் கபீர் கான் தெரிவித்துள்ளார். (அ)

# ஹற்றனில் விபத்துக்குள்ளான பஸ்ஸின் சாரதி கதவு திறந்திருந்தமை கண்டறிவு!

கொழும்பு, டிசெ. 25

ஹற்றன் - மல்லியப்பு பகுதியில் அண்மையில் விபத்துக்குள்ளான பஸ்ஸின் சாரதி இருக்கைக்கு அருகாமையில் உள்ள கதவின் பூட்டு இயங்காத காரணத்தினால் கதவு திறக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளான பஸ்ஸை நுவரெலியா மாவட்ட மோட்டார் வாகன பரிசோதகர் மேற்கொண்ட பரிசோதனைகளின் பின்னர் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் பஸ் சாரதி பாதுகாப்புப் பட்டியை அணிந்திருக்கவில்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது.

பஸ்ஸில் அதிகளவில் இரும்பு சாதனங்கள் பொருத்தப்பட்டிருந்ததால் பயணிகளுக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டிருந்தமையும் தெரியவந்துள்ளது.

ஹற்றன் - மல்லியப்பு பகுதியில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் 14 வயது சிறுவன் ஒருவன் உள்ளிட்ட 3 பேர் உயிரிழந்தனர்.

இந்த சம்பவத்தில் காயமடைந்த 53 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

அத்துடன், குறித்த விபத்தில் காயமடைந்த பஸ் சாரதி சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்புக்கு மத்தியில் தொடர்ந்தும் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (அ)

# மின் கட்டணத்தை குறைக்கவேண்டாம் அரசாங்கம் மின்சார சபைக்கு உத்தரவு!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 25

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்கு எதிராக அரசாங்கமும் மின்சார சபையும் இணைந்து செயற்பட்டு மக்களுக்கு கிடைத்திருக்க வேண்டிய நிவாரணத்தைத் தடுத்துள்ளன. மக்களை ஏமாற்றாமல் மின் கட்டணத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார அரசாங்கத்தை வலியுறுத்தினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-தேசிய மக்கள் சக்தி தேர்தல் காலங்களில் மின்சாரக் கட்டணத்தை மூன்றில் இரண்டு மடங்கால் குறைப்பதாகக் கூறியது.

மின்சார சட்டத்துக்கமைய இவ்வாண்டிறுதியில் மின் கட்டணத்தில் திருத்தங்களை மேற்கொண்டிருக்கவேண்டும்.

எவ்வாறிருப்பினும் மின் கட்டணத்தை குறைக்க வேண்டாம் என அரசாங்கத்தினால் மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்கு எதிராக அரசாங்கமும் மின்சார சபையும் இணைந்து செயற்பட்டு மக்களுக்கு கிடைத்திருக்க வேண்டிய நிவாரணத்தைத் தடுத்துள்ளன.

தேர்தல் காலங்களில் இவர்கள் கூறியதற்கு புறம்பாக தற்போது மூன்று ஆண்டுகளின் பின்னரே மின் கட்டணத்தில் திருத்தங்கள் ஏற்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு மக்களை ஏமாற்றாமல் மின் கட்டணத்தில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்-என்றார். (அ)

# இவ்வருடத்தின் மூன்றாம் காலாண்டின் பொருளாதார வளர்ச்சி 5.5 வீத வளர்ச்சி

கொழும்பு, டிசெ. 25

இவ்வருடத்தின் மூன்றாம் காலாண்டில், அதாவது கடந்த ஜூலை - செப்டெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் நாட்டின் பொருளாதாரம் 5.5 வீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

தீவிர பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு படிப்படியாக மீட்சியடைந்துவரும் நிலையில், புள்ளிவிபரத்திணைக்களத்தின் தரவுகளின்படி இவ்வருடத்தின் ஜூலை - செப்ரெம்பர் வரையான மூன்று மாதங்களில் விவசாயத்துறை 3 வீதமாக வளர்ச்சியடைந்திருப்பதுடன் கைத்தொழில் மற்றும் சேவைத்துறைகள் முறையே 10.8 மற்றும் 2.6 வீதத்தினால் விரிவடைந்துள்ளன.

2022 இல் தீவிரமடைந்த நெருக்கடியை அடுத்து பொருளாதாரம் 7.3 வீத சுருக்கத்தைப் பதிவுசெய்தது. இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த ஒரு வருடகாலமாக நிலையான மீட்சிக்கான குறிகாட்டிகளைக் காண்பித்துவரும் நாட்டின் பொருளாதாரம், இவ்வருடத்தின் மூன்றாம் காலாண்டில் 5.5 வீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. (அ)

# போதைப்பொருளுடன் ரஷ்ய நாட்டவர் கைது!

கொழும்பு, டிசெ. 25

"குஷ்" என்ற போதைப்பொருளை கடத்த முற்பட்ட நபர் ஒருவர் நேற்று கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் பெறுமதி 10 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேக நபர், 34 வயதான ரஷ்ய நாட்டவர் என்றும் அவர் நாட்டில் தகவல் தொழில்நுட்ப நிபுணராக பணிபுரிந்தவர் என்றும் ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

# இலங்கையின் வெளிநாட்டு நாணய மதிப்பீட்டை மேம்படுத்தியது மூடிஸ்!

கொழும்பு, டிசெ. 25

இலங்கையின் நீண்ட கால வெளிநாட்டு நாணய வழங்குநர் மதிப்பீட்டை "சி.ஏ" இலிருந்து "சி.ஏ.ஏ 1" க்கு கடன் தர மதிப்பீட்டு நிறுவனமான மூடிஸ் நிறுவனம் மேம்படுத்தியுள்ளது.

நாட்டின் சர்வதேச இறையாண்மை பத்திரங்களை வெற்றிகரமாக மறுசீரமைத்ததை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச இறையாண்மை பத்திரங்கள் மறுசீரமைப்பு, புதிய மற்றும் எதிர்கால வெளியீடுகளில் இயல்புநிலை ஆபத்தைக் குறைக்கும் என்பதால், தரமதிப்பீட்டை மேம்படுத்தியதாக மூடிஸ் மதிப்பீட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு வருடங்களில் இலங்கையின் கடன் அடிப்படைகள் வளர்ச்சியடைந்துள்ளதுடன், வெளி மற்றும் பணப்புழக்க அபாயங்களும் குறைந்துள்ளதாக அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

நிதி நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக இலங்கை அரசாங்கத்துடனான பத்திரப் பதிவு ஒப்பந்தத்தின் மீளாய்வு நடவடிக்கையாக இந்த நடவடிக்கை அமைந்துள்ளதாக கடன் தர மதிப்பீட்டு நிறுவனமான மூடிஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி நிதியத்தில் பணம் பெற்றுள்ள மேலும் பலரின் விவரம் பாராளுமன்றுக்கு!

அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 25

**ஜனாதிபதி நிதியத்திலிருந்து பணம் பெற்றுக்கொண்ட மேலும் பல அரசியல்வாதிகளின் விவரங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம் பெற்ற போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஜனாதிபதி நிதியத்திலிருந்து பணம் பெற்றுக்கொண்ட முன்னாள் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரது விவரங்களை நாம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தோம்.

2005 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டுவரை பணத்தை பெற்றுக்கொண்டோரின் தகவல்கள் வெளியிடப்பட்டன. அந்தக் காலப் பகுதியில் பணம் பெற்றுக் கொண்ட பிரதேச சபை, மாகாண சபை உறுப்பினர்கள், ஆளுநர்கள் உள்ளிட்டோரின் பெயர் விபரங்களையும் திரட்டி வருகிறோம். அதற்கு முன்னரான ஆவணங்களையும் பரிசீலிக்கிறோம்.

ஜனாதிபதி செயலகத்தில் சில ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் சிரமமாக இருக்கிறது.

எவ்வாறாயினும் அடுத்த பாராளுமன்ற அமர் வின்போது இரண்டு கடமை கள் உள்ளன.

ஒன்று ஜனாதிபதி நிதியத்திலிருந்து பணம் பெற்றுக் கொண்ட ஏனைய அரசியல்வாதிகளின் பெயரை வெளியிடுவது மற்றையது எதிர்க்கட்சித் தலைவரின் கல்வித் தகைமையை பரிசீலிப்பது ஆகியனவாகும்-என்றார். (அ)

சப்ரகமுவ மாகாணத்தில்

# 154 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்!

கொழும்பு, டிசெ. 25

சப்ரகமுவ மாகாணத்தில் நிலவி வரும் ஆசிரியர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக ஆசிரியர் சேவைக்கு புதிதாக 154 பட்டதாரிகளுக்கு நேற்று முன் தினம் ஆசிரியர் நியமனம் வழங்கி வைக்கப்பட்டது.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன தலைமையில் சப்ரகமுவ மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இலங்கையின் ஆசிரியர் சேவைக்கு சப்ரகமுவ மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் இவ்வருடம் நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இந்த ஆட்சேர்ப்புகள் இடம்பெற்றுள்ளன.

இந்நிகழ்வில், பெருந்தோட்ட சமூக அபிவிருத்தி பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், இரத்தினபுரி மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சாந்த பத்மகுமார, இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ராஜபக்ச, சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் புஷ்பகுமார திஸாநாயக்க, சப்ரகமுவ மாகாண பிரதம செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய, மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சாமர பமுனு ஆராச்சி, மாகாணக் கல்விப் பணிப்பாளர் தர்ஷினி இந்தமல்கொட உட்பட அரச அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர். (அ)

# நவம்பர் ஏற்றுமதி வருமானம் 1269.33 மில்லியன் டொலர்கள்

கொழும்பு, டிசெ. 25

இலங்கை சுங்கத்தின் தரவுகளுக்கமைய, கடந்த நவம்பர் மாதம் நாட்டின் மொத்த ஏற்றுமதி வருமானம் 1269.33 மில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது 0.04 சதவீத அதிகரிப்பாகும்.

அதேநேரம், கடந்த நவம்பர் மாதம் வர்த்தக பொருள் ஏற்றுமதி 943.1 மில்லியன் அமெரிக்க டொலராக பதிவானது.

கடந்த வருடம் நவம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் இது 5.6 சதவீத வீழ்ச்சியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இறப்பர் சார்ந்த உற்பத்தி, உணவு மற்றும் குளிர்பானம் மற்றும் கடலுணவு ஏற்றுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியே இதற்கான காரணம் என கண்டறியப்பட்டுள்ளது. (அ)

# இயற்கை பேரழிவால் சேதத்தை குறைக்க ஜப்பானின் நிதியுதவியில் டொப்ளர் ராடர்

கொழும்பு, டிசெ. 25

வானிலை மதிப்பீடுகளின் துல்லியத்தை கணிசமாக மேம்படுத்தவும் நம்பகமான வானிலை முன்னறிவிப்புகள் மற்றும் எச்சரிக்கைகளை செயல்படுத்தவும் இயற்கை பேரழிவுகளால் ஏற்படும் சேதத்தைக் குறைக்கவும் ஜப்பானின் நிதியுதவியில் டொப்ளர்ராடர்வலையமைப்பை நிறுவுவதற்கான அடிக்கால் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது.

புத்தளத்தில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை நடைபெற்ற டொப்ளர் ராடர் வலையமைப்பை நிறுவுவதற்கான அடிக்கல் நாட்டும் விழா மற்றும் ஊடகவியலாளர் சந்திப்பில் ஜப்பான் தூதரகத்தின் துணைத் தலைவர் கமோஷிதா நவோக்கி கலந்துகொண்டார்.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில்பாதுகாப்பு அமைச்சின் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மேலதிக செயலாளர் கே.ஜி தர்மதிலக மற்றும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அதுல கருணாநாயக்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ஜப்பானிய மானிய உதவியினால் நிதியளிக்கப்பட்ட டொப்ளர் ராடர் வலையமைப்பு இலங்கையில் நிகழ்நேர மழைவீழ்ச்சியைக் கண்காணிப்பதற்கான திறனை மேம்படுத்துவதையும் வானிலை தொடர்பான அனர்த்தங்களின் தாக்கத்தைத் தணிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. (அ)

# தேங்காயின் ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு!

கொழும்பு, டிசெ. 25

தேங்காய் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்களின் ஏற்றுமதி வருமானம் கடந்த நவம்பர் மாதத்தில் 13.8 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

இதன்படி, 70 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்த வருடத்தின் முதல் 11 மாத காலப்பகுதியில் தேங்காய் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்களை ஏற்றுமதி செய்ததன் மூலம் 782 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு தேங்காய் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்களின் ஏற்றுமதி நடவடிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில், சந்தையில் தேங்காய்க்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதுடன், தேங்காயின் விலையும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# விவசாயிகளுக்கு இழப்பீடுகள் அமைச்சரவை நேற்று அனுமதி!

கொழும்பு, டிசெ. 25

அண்மைக்கால பாதகமான காலநிலையினால் பயிர்கள் அழிவடைந்த நெல் விவசாயிகளுக்கு ஹெக்ரேயருக்கு 100,000 ரூபா வரை இழப்பீடு வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2025 பயிர் காப்புறுதி ஒதுக்கீட்டின் கீழ் சோளம், மிளகாய், உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் மற்றும் சோயா விவசாயிகளுக்கும் இதேபோன்ற இழப்பீடு வழங்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

மோசமான காலநிலையால் அழிக்கப்பட்ட அல்லது சேதமடைந்த தோட்டங்கள் மற்றும் நீர்ப்பாசனத் திட்டங்கள் பற்றிய விவரத்தையும் அமைச்சர் வழங்கினார்.

2024 டிசெம்பர் 2 வரையான விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் தரவுகளின்படி-நெல் வயல்கள்: 91300 ஏக்கர்கள் முற்றாக அழிந்தது 86225 ஏக்கர் பகுதி சேதமடைந்துள்ளன.

நீர்ப்பாசனத் திட்டங்கள்: 173 சிறு திட்டங்கள் முற்றிலும் அழிந்தன1,148 பகுதி சேதமடைந்துள்ளன

காய்கறி தோட்டங்கள்: நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரம் 750 ஏக்கர் நாசமாகின. (அ)

# பொலிஸாருக்கு முழு சுதந்திரம்!

பிரதி அமைச்சர் சுனில் வட்டகல

கொழும்பு, டிசெ. 25

போதைப்பொருளை ஒழிப்பதற்கு தற்போதைய அரசாங்கம் பொலிஸாருக்கு முழு சுதந்திரம் வழங்கியுள்ளதாக பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

புறக்கோட்டை மிதக்கும் வணிக வளாகம் குறித்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தபோதே இதனைத் தெரிவித்த அவர்,புறக்கோட்டை மிதக்கும் வணிக வளாகம் போதைப் பொருள் கிடங்காக மாறியுள்ளதாகவும் கவலை அவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-புறக்கோட்டை மிதக்கும் வணிக வளாகம் 2014 ஆம் ஆண்டு 352 மில்லியன் ரூபாய் செலவில் கட்டப்பட்டது.

தற்போது அங்குள்ள 92 கடைகளில் 80 வீத கடைகள், சேதமடைந்து காணப்படுகின்றன. குறிப்பாக அங்குள்ள மின் விளக்குகள் செயலிழந்து காணப்படுகின்றன. அத்துடன் அப்பகுதியில் பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன-என்றார். (அ)

# புதையல் தேடிய நால்வர் கைது!

கொழும்பு, டிசெ. 25

கிராந்துருகோட்டை பகுதியில் நேற்று முன் தினம் புதையல் பொருட்களைத் தேடி அகழ்வில் ஈடுபட்ட நால்வர் கிராந்துருகோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கிராந்துருகோட்டை பொலிஸ் நிலையத்திற்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 29 மற்றும் 38 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# ருமேனியத் தூதுவர் பிரதமருடன் சந்திப்பு

கொழும்பு, டிசெ. 25

இலங்கைக்கான ருமேனிய தூதுவர் ஸ்டெலுதா அர்ஹிரே, தனது பதவிக்காலம் நிறைவடைந்ததை அடுத்து பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை நேற்று முன் தினம் சந்தித்தார்.

இலங்கைக்கும் ருமேனியாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கான அர்ப்பணிப்புக்காக தூதுவருக்கு நன்றி தெரிவிப்பதாக பிரதமர் இதன்போது தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் மேம்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார். தூதுவரின் எதிர்கால பணிகளுக்கு பிரதமர் வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்வில் பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி மற்றும் அதிகாரிகள் குழுவினர் கலந்துகொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ள அழிவை பார்வையிடுவதற்கு கொழும்பிலிருந்து வந்தது விசேட குழு

## அதிகாரிகளின் செயல்பாடுகள் குறித்து விவசாயிகள் விசனம்

திருகோணமலை, டிசெ. 25

அண்மையில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தால் அதிகளவு பாதிக்கப்பட்ட திருகோணமலை - சேருநுவர கமநல சேவைப் பிரிவுக்குட்பட்ட வயல் பகுதிகளுக்கு கமநல காப்புறுதிச் சபையின் விசேட அதிகாரிகள் குழு வருகை தந்து பார்வையிட்டு சேத விவரங்களை அறிக்கையிட்டனர்.



கமநல சேவை காப்புறுதிக்குழுவின் உத்தியோகத்தர்கள், சேருநுவர கமநல சேவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் பாதிக்கப்பட்ட வயல் நிலங்களுக்கு சென்று சேத நிலைமைகளை பார்வையிட்டு விவசாயிகளிடமிருந்து தகவல்களை பெற்றுக்கொண்டனர்.

தமது வேளாண்மைச் செய்கை பாதிக்கப்பட்ட நிலையில் யாரும் வந்து பார்வையிடவில்லை. இப்போதுதான் வந்து பார்க்கின்றனர். தாம் இரண்டாவது தடவையாக விதைப்புச் செய்துள்ளதாகவும் அதிகளவு செலவு ஏற்பட்டுள்ளதாகவும் அப்பகுதி விவசாயிகள் விசனம் வெளியிட்டுள்ளனர். (எ)

# பாலமுனை மருத்துவமனைக்கு பிராந்திய பணிப்பாளர் வருகை



பாலமுனை, டிசெ.25

பாலமுனை பிரதேச மருத்துவமனை அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடுவதற்காக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸடீன் வருகை தந்தார்.

குறித்த மருத்துவமனை அபிவிருத்தி தொடர்பில் அபிவிருத்திக் குழுவினருக்கும் பிராந்திய பணிப்பாளருக்கும் இடையில் விசேட கலந்துரையாடலொன்று நடைபெற்றது. குறைந்த வளங்களுடன் பெரும் பணிகளை மேற்கொண்டு பிராந்தியத்தில் முதல் நிலை பெற்றுள்ள பாலமுனை மருத்துவமனையின் சேவைகளை பாராட்டிய பணிப்பாளர், அங்குள்ள மருத்துவர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கும் நன்றி தெரிவித்ததுடன், மருத்துவமனையில் நிலவும் குறைபாடுகள் மற்றும் தேவைகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டார். (எ)

# நுளம்பு வலைகள் வழங்கல்



காரைதீவு, டிசெ.25

காரைதீவில் வெள்ளப் பாதிப்புக்கு உள்ளான மக்களுக்கு அனைத்துலகத் தமிழர் பேரவையால் நுளம்பு வலைகள் வழங்கப்பட்டன.

காரைதீவு பிரதேச செயலகத்தில் வைத்து பிரதேச செயலாளர் ஜி. அருணன் தலைமையில் நுளம்பு வலைகள் வழங்கப்பட்டன.

அனைத்துலக தமிழர் பேரவையின் நிதிப் பங்களிப்புடன் உலகத் தமிழ் மாணவர் ஒன்றியம் மற்றும் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம், விருட்சம் உதவும் உள்ளங்கள் அமைப்பினரால் மக்களுக்கு நுளம்பு வலைகள் வழங்கப்பட்டன. (எ)

# சாய்ந்தமருதில் அவசரகால நிலைகளுக்கு முகங்கொடுப்பது குறித்து பயிற்சி நிகழ்வு

சாய்ந்தமருது, டிசெ.25

டயகோணியா மற்றும் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி மற்றும் செயல் முன்னணி அனுசரணையில் யு கான் திட்டத்தின் ஊடாக சமூக அபிவிருத்தி அமையத்தின் ஏற்பாட்டில், விழுமியக் கல்வி ஊடாக, புத்தாக்க சமூக தீர்வுகளை வழங்கும் தொனிப் பொருளில், "அவசரகால நிலைகளுக்கு முகங்கொடுப்பது தொடர்பான பயிற்சி நிகழ்வு" சாய்ந்தமருது றியாலுல் ஜன்னா வித்தியாலயத்தில் நடை பெற்றது.

அனர்த்தங்களால் பாதிக்கப்படும் மக்களிடத்தில் மீட்பு மற்றும் மனிதாபிமான பணிகளை முன்னெடுப்பதில், இளைஞர்கள் மற்றும் தொண்டர்கள் மத்தியில் நற்செயல்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக், கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் என்.எம்.ஏ. மலீக் ஆகியோரின் பங்குபற்றலுடன் இந்தப் பயிற்சி நிகழ்வு நடைபெற்றது.

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் பல்வேறு அனுபவமிக்கவரும், காலநிலை மாற்றம் தொடர்பான செயல்பாட்டாளரும், தென்கிழக்குப் பல்கலைக்கழக பொறியியல்பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. அஸ்லம் சஜா இதில் வளவாளராக கலந்து கொண்டார். (எ)

# உணவு விற்பனை நிலையங்களில் சுகாதாரத்துறையினர் சோதனை!

சாய்ந்தமருது, டிசெ. 25

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட பிரிவுகளில் உள்ள உணவு விற்பனை நிலையங்களில் திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகிலா இஸ்ஸதீனின் ஆலோசனைக்கமைய சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதன் தலைமையில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், டெங்கு களத்தடுப்பு பணியாளர்கள் அடங்கிய குழுவினர் மேற்கொண்ட இந்த திடீர் பரிசோதனையின் போது முறையற்ற வகையில் உணவு தயாரிக்கும் மூன்று நிறுவனங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அந்த நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதுடன் டெங்கு பரவும் வகையில் சுற்றுச்சூழலை அசுத்தமாக வைத்திருந்தவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த திடீர் பரிசோதனையின் போது மூன்று ஹோட்டல்கள், ஒரு உணவகம், மரக்கறி விற்பனை நிலையங்கள் மற்றும் பழக்கடை போன்றனவும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டன என்றும் மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்தவும், ஆரோக்கியத்தை கவனத்தில் கொண்டும் எங்கள் பணி என்றும் தொடரும் என சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி ஜே.மதன் தெரிவித்தார். (எ)

# தேசிய மட்ட சாதனையாளர்கள் கௌரவிப்பு



காரைதீவு, டிசெ.25

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அறநெறி பாடசாலை மாணவர்களின் ஆக்கத்திறனை வெளிக்கொணரும் வகையில் நடத்தப்பட்ட தேசிய ஆக்கத்திறன் போட்டியில் பங்குபற்றி தேசிய மட்டத்தில் வெற்றியீட்டிய காரைதீவு பிரதேச மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு காரைதீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. (எ)

# மருத்துவமனைக்குள் சுத்தியலுடன் அத்துமீறி நுழைந்த இருவர் கைது!

கல்முனை, டிசெ. 25

வைத்திய அத்தியட்சகரின் உரிய அனுமதியின்றி மருத்துவமனைக்குள் அத்துமீறி உட்பிரவேசித்த இருவரை கல்முனை தலைமையக பொலிஸார் கைது செய்தனர்.

இந்தச் சம்பவம் அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை வடக்கு ஆதார மருத்துவமனை வளாகத்தில் இடம்பெற்றுள்ளது. இதன்போது, குறித்த மருத்துவமனையில் இருவர் அனுமதி இன்றி உட்பிரவேசித்ததாக அங்கு பாதுகாப்பு பணிக்கு பொறுப்பான அதிகாரியால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாட்டிற்கமைய குறித்த இருவரையும் கைது செய்த பொலிஸார் தடுத்து வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், கைதானவர்கள் கல்முனை மாநகரில் உள்ள பிரபல ஆடையகம் ஒன்றின் பணியாளர்கள் என்பதுடன் குறித்த மருத்துவமனை பணிப்பாளரின் முன் அனுமதி இன்றி சுத்தியலுடன் மருத்துவமனைக்குள் பிரவேசித்து மருத்துவமனைக்குள் சந்தேகத்துக்கு இடமாக நடமாடி முரண்பாடான கருத்துக்களை பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடம் தெரிவித்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹிஸ்புல்லாவை வீழ்த்திவிட்டோம்

## இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

டெல் அவிவ், டிசெ.25

**ஹனியே, நஸ்ரல்லாவை கொன்றோம், ஹமாஸ், ஹிஸ்புல்லாக்களை வீழ்த்திவிட்டோம் என்று இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் காட்ஸ் தெரிவித்துள்ளார்.**

கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7 ஆம் திகதி அன்று இஸ்ரேல் - காஸா ஆகிய இரு நாடுகளில் இருந்து ஒலிக்கத் தொடங்கிய போர் சத்தம் இன்று வரை ஓயவில்லை. இரண்டு நாடுகளின் அதிகார மையங்களுக்கு மத்தியில் பொதுமக்கள், குழந்தைகள், பெண்கள் தங்களது இன்னுயிரை துறந்து வருகின்றனர். ஆனால், இன்னும் போரின் உக்கிரம் குறைந்தபாடில்லை. ஹமாஸை அழிக்காமல் ஓயமாட்டோம் என இஸ்ரேல் வீர முழக்கமிட்டு வருகிறது. இஸ்ரேல் தாக்குதலில் இதுவரை 45, 220இற்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில், இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தவை வருமாறு, "ஹவுத்திகள் இஸ்ரேலை நோக்கி ஏவுகணைகளை செலுத்தும் இந்த நாளில் நான் சில விடயங்களை தெளிவுபடுத்த விரும்புகிறேன். நாங்கள் ஹமாஸ்களை, ஹிஸ்புல்லாக்களை வீழ்த்திவிட்டோம். ஹனியே, நஸ்ரல்லாவை கொன்றோம். ஹமாஸ், ஹிஸ்புல்லாக்களை வீழ்த்திவிட்டோம். அந்த அமைப்புகளின் தலைவர்களைக் கண்டுபிடித்து அவர்கள் தலையைத் துண்டிப்போம்.

ஈரானின் பாதுகாப்பு அமைப்புகளை ஒடுக்கிவிட்டோம். சிரியாவில் ஆசாத் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டோம். தீவிரவாத அச்சரேகைக்கு பெரிய அடி கொடுத்துள்ளோம். அதேபோன்று, ஏமனில் உள்ள ஹவுத்திகளுக்கு கடுமையான பதிலடி கொடுப்போம். ஹவுத்திகளின் உட்கட்டமைப்பு உத்திகளை தவிடு பொடியாக்குவோம். செங்கடலில் சரக்கு கப்பல்களுக்கு அவர்கள் ஏற்படுத்தும் அச்சுறுத்தல்களை முறியடிப்போம். பலஸ்தீனத்துக்கு ஆதரவாக செயல்பட்டு அவர்கள் இஸ்ரேலுக்கு நெருக்கடி தருகிறார்கள்"- என்றார். (எ)

## அமெரிக்காவின் ஏ. ஐ. பிரிவின் ஆலோசகராக தமிழர் நியமனம்



வாஷிங்டன், டிசெ.25

அமெரிக்காவின் ஏ. ஐ. பிரிவின் ஆலோசகராக இந்திய அமெரிக்கரான சிறீராம் கிருஷ்ணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற ட்ரம்ப், தனது அரசில் பணியாற்றவுள்ளவர்களை தெரிவு செய்யும் பணியில் முழுக் கவனம் செலுத்தி வருகிறார். இதன்படி, தொழிலதிபர்கள் எலான் மஸ்க் உள்ளிட்ட பலருக்கு அரசின் முக்கிய பொறுப்புகளை வழங்கியுள்ளார்.

அதேபோன்று, விவேக் இராமசாமி உள்ளிட்ட இந்திய வம்சாவளியினரும் ட்ரம்பின் அரசு நிர்வாகத்தில் இடம் பிடித்துள்ளனர்.

இந்த நிலையில், சென்னையை சேர்ந்த சிறீராம் கிருஷ்ணனை, வெள்ளை மாளிகையின் செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தொடர்பான அறிவியல் தொழில்நுட்ப முதுநிலை ஆலோசகராக ட்ரம்ப் நியமனம் செய்துள்ளார். (எ)

## உணவு பற்றாக்குறையால் தவிக்கும் 40 மில். மக்கள்!

வாஷிங்டன்,டிசெ.25

மேற்கு மற்றும் மத்திய ஆபிரிக்கா முழுவதும் 40 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் உணவுப் பற்றாக்குறையால் தவித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் இந்த எண்ணிக்கை 52 மில்லியனாக உயரும் என்று ஐக்கிய நாடுகளின் உணவு நிறுவனம் தெரிவித்துள்ளது.

புதிய அறிக்கையின்படி, உலக உணவுத் திட்டம் 3. 4 மில்லியன் மக்கள் தற்போது பசியின் அவசர நிலைகளை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளது.

மோதல், இடப்பெயர்வு, பொருளாதார ஸ்திரமின்மை மற்றும் கடுமையான காலநிலை அதிர்ச்சிகள் ஆகியவை உணவுப் பாதுகாப்பின்மையைத் தூண்டுவதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## கனடாவில் கடும் பனிப்பொழிவு

றொறன்ரோ, டிசெ.25

கனடாவின் றொறன்ரோ நகரில் கடும் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது.

மேலும், சில பகுதிகளில் போக்குவரத்து செய்வது தொடர்பிலும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, சில இடங்களில் ஐந்து முதல் பத்து சென்ரிமீற்றர் வரையில் பனிப்பொழிவு ஏற்படும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

வீதிகள் வழுக்கும் தன்மையுடன் காணப்படும் எனவும், எனவே சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் பயணங்களை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

மேலும், வாகனச் சாரதிகள் வீதியை பார்ப்பதில் சிரமங்கள் ஏற்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ)

## தீவிரவாத அமைப்புடன் பாகிஸ்தான் தொடர்பு

### பிரெஞ்ச் இதழில் அதிர்ச்சி தகவல்

பாரிஸ், டிசெ. 25

ஜெய்ஷ் - இ - முகம்மது (ஜே. இ. எம்) தீவிரவாத அமைப்புடன் பாகிஸ்தானின் ஆபத்தான உறவை பிரான்ஸ் நாட்டின் ஒரு பருவ இதழ் அம்பலப்படுத்தியுள்ளது.

பாரிஸ் நகரிலிருந்து வெளியாகும் இந்த இதழின் புலனாய்வு கட்டுரையில், தீவிரவாதத்தை எதிர்த்து போரிட வேண்டிய கடமை பாகிஸ்தானுக்கு இருந்தபோதிலும், அந்த நாடு தீவிரவாத அமைப்புகளுக்கு புகலிடம் அளித்து வருவதை வெளிச்சம் போட்டு காட்டியுள்ளது. பாகிஸ்தானில் குறிப்பாக பஞ்சாப் மாகாணத்தின் பகவல்பூர் பகுதியில் ஜே. இ. எம். எழுச்சி பெற்று விளங்குவதை அந்தக் கட்டுரை விளக்குகிறது.

பாகிஸ்தான் அரசுக்கு சொந்தமான விண்வெளி மற்றும் பாதுகாப்பு அமைப்பு உட்பட அந்த நாட்டின் 4 நிறுவனங்களுக்கு எதிராக அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது. இந்த நிலையில் பிரெஞ்ச் இதழில் வெளியாகியுள்ள கட்டுரை பாகிஸ்தானுக்கு மற்றொரு பின்னடைவாக கருதப்படுகிறது. (எ)

## ஷேக் ஹசீனாவை திருப்பி அனுப்ப இந்தியாவிடம் மீண்டும் கோரிக்கை

டாக்கா, டிசெ.25

முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவை திருப்பி அனுப்புமாறு இந்தியாவிடம் பங்களாதேஷ் இடைக்கால அரசாங்கம் மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பங்களாதேஷில் ஷேக் ஹசீனா 16 ஆண்டுகளாக பிரதமராக இருந்தார். அவரது அரசுக்கு எதிராக மாணவர்கள் போராட்டம் நடத்தி வந்தனர். கடந்த ஒகஸ்ட் 5ஆம் திகதி, மாணவர்கள் போராட்டம் தீவிரமடைந்தது. இதனால், ஷேக் ஹசீனா நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்சமடைந்தார். அவரது அரசு கவிழ்க்கப்பட்டது. வேறு நாட்டில் அரசியல் புகலிடம் கிடைக்காததால், ஷேக் ஹசீனா



4 மாதங்களுக்கு மேலாக இந்தியாவில் தங்கியிருக்கிறார்.

இந்த நிலையில் முகமது யூனுஸ் தலைமையில் பங்களாதேஷில் இடைக்கால அரசு பதவியேற்றது. ஷேக் ஹசீனா, அவருடைய அமைச்சர்கள், ஆலோசகர்கள், இராணுவ, சிவில் அதிகாரிகள் ஆகியோருக்கு எதிராக பல்வேறு குற்றவியல் வழக்குகளும், இனப்படுகொலை குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டது.

இந்த வழக்குகளில் ஷேக் ஹசீனா உள்ளிட்டோருக்கு எதிராக டாக்காவில் உள்ள சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் பிடி யாணை பிறப்பித்துள்ளது.

இதற்கிடையே, வழக்குகளை சந்திக்க ஷேக் ஹசீனாவை இந்தியாவில் இருந்து வரவழைக்க ஏற்பாடு செய்யுமாறு வெளிவிவகார அமைச்சுக்கு உள்துறை அமைச்சு கடிதம் எழுதியது.

இதன் பேரில், பங்களாதேஷ் இடைக்கால அரசு, ஷேக் ஹசீனாவை பங்களாதேஷுக்கு திருப்பி அனுப்புமாறு இந்தியாவுக்கு செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. (எ)

'மொஸ்கோவில் வாழமுடியாது'

## சிரியா ஜனாதிபதியிடம் விவாகரத்து கோரும் மனைவி



டமாஸ்கஸ்,டிசெ.25

"மொஸ்கோவில் வாழ முடியாது. அதனால் எனக்கு விவாகரத்து வேண்டும். லண்டன் செல்ல சிறப்பு அனுமதி வேண்டும்" என்று சிரியாவிலிருந்து வெளியேறிய ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்தின் மனைவி அஸ்மா அல் ஆசாத் கோரியுள்ளார். ரஷ்ய நீதிமன்றத்தில் அவர் இது தொடர்பில் மனுத்தாக்கல் செய்துள்ளதாக அரபு மற்றும் துருக்கி நாட்டு ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன.

சிரியாவில் ஜனாதிபதியாக இருந்த பஷார் அல் ஆசாத் அரசுக்கு எதிராக கடந்த 2011ஆம் ஆண்டு புரட்சி வெடித்தது. ஆசாத் படைகளுக்கும் கிளர்ச்சிப் படைகளுக்கும் இடையே பல ஆண்டுகளாக போர் நடைபெற்றது. இதில் சுமார் 5 இலட்சம் பேர் உயிரிழந்தனர். இந்த நிலையில், கடந்த நவம்பர் 27ஆம் திகதி சிரியா இராணுவத்துக்கு எதிராக மிகப்பெரிய போரை துருக்கி ஆதரவு பெற்ற எச். டி. எஸ். கிளர்ச்சிப் படை தொடங்கியது. அதேநேரம், ஈரானும், ரஷ்யாவும் ஆதரவு தராததால் ஆசாத் தலைமையிலான சிரியா இராணுவம் பின்னடைவை சந்தித்தது. இதனால், முக்கிய நகரங்களை கைப்பற்றிய கிளர்ச்சியாளர்கள், தலைநகர் டமாஸ்கஸை கடந்த 8ஆம் திகதி கைப்பற்றினர். இதையடுத்து, ஆசாத் ரஷ்யாவுக்கு தப்பிச் சென்றார். அவர் செல்வதற்கு முன்னதாகவே அவரது குடும்பத்தினர் அங்கு சென்றுவிட்டனர். இந்த நிலையிலேயே ஜனாதிபதியின் மனைவி விவாகரத்து கோரியுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்களது பிரச்னைகளை அரசாங்கம் நேரடியாக தீர்த்துவைக்க வேண்டும் என்று விரும்பும் சிறுபான்மைச் சமூகங்கள்



கலாநிதி ஜெகான் பெரேரா

சமாதானத்தை கட்டியெழுப்புவதற்காக பாடுபடும் வேறு அமைப்புக்களுடன் சேர்ந்து போரினல் பாதிக்கப்பட்ட பெண்கள் சங்கம் ஏற்பாடு செய்திருந்த " சமூக ஒருங்கிணைப்பு மற்றும் சகவாழ்வின் ஊடாக சமாதானமான பன்முக இலங்கை ஒன்றை கட்டியெழுப்புதல்" என்ற மகாநாடொன்றில் தேசிய ஒருங்கிணைப்பு பிரதியமைச்சர் முனீர் முலாபரின் பங்கேற்பு முக்கியமான ஒரு நிகழ்வாக அமைந்தது. தேசிய ஒருங்கிணைப்பில் அரசாங்கத்துக்கு இருக்கும் பற்றுறுதி தொடர்பாக அமைச்சர் சொல்வன்மையுடன் பேசினார்.

சகல மதங்களையும் சேர்ந்த மதகுருமார்கள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் கல்விச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள், வெளிநாடுகளின் தூதரகங்களின் இராஜதந்திரிகள் என்று 150 க்கும் அதிகமானவர்கள் மகாநாட்டில் பங்கேற்றார்கள். அமைச்சரின் பங்கேற்பும் உரையும் மகாநாட்டில் பங்கேற்றவர்களுக்கும் பொதுவில் நாட்டுக்கும் இரு முக்கியமான சமிக்ஞைகளை கொடுத்தது. தேசிய நல்லிணக்கச் செயன்முறை காலத்துக்கும் முயற்சிக்கும் தகுதியானதாக இருக்கவேண்டும் என்று அரசாங்கம் கருதுகின்றது என்பது ஒரு செய்தி. சிவில் சமூகத்தினதும் குடிமக்களினதும் பணி நாட்டின் நல்வாழ்வுக்கு முக்கியமானது என்பது மற்றைய செய்தி.

சிவில் சமூகத்தின் ஆக்கபூர்வமான வகிபாகம், " சமூக ஒருங்கிணைப்பு மற்றும் சகவாழ்வு ஊடாக சமாதானமான பன்முக இலங்கை ஒன்றை கட்டியெழுப்புதல் " என்ற இந்த மாகாநாட்டில் தெளிவாகத் தெரிந்தது. அதாவது பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பதற்கான அரசாங்கத்தின் பணிகளுக்கு வசதியான சூழ்நிலையை சிவில் சமூகத்தினால் தயார்செய்ய முடியும். தேசிய நலனுக்காக அரசாங்கம் மேற்கொள்கின்ற தீர்மானங்களை மக்களுக்கு விளக்கவும் சமுதாயத்தின் அடிமட்டங்களுக்கு சென்று பணியாற்றவும் அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்களினால் முடியும்.

அமைச்சர் முலாபர் பங்கேற்ற மகாநாடு அதற்கு ஒரு உதாரணம். ஏனென்றால் தேசிய நல்லிணக்க விவகாரம் தொடர்பில் மூத்த பௌத்த பிக்குகள் முன்னெடுத்த முன்முயறசியில் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்துடன் ஏற்பட்ட முட்டுக்கட்டையை அகற்றும் நோக்கத்தை மகாநாடு கொண்டிருந்தது.2023 ஏப்ரிலில் பிக்குகளும் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் பிரதிநிதிகளும் நேபாள நாட்டில் சந்தித்து தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்பக்கூடிய -- இமாலயப் பிரகடனம் என்று இன்று அறியப்படுகின்ற -- ஒரு தொகுதி கோட்பாடுகளை வடிவமைத்தனர்.

மகாநாட்டு அழைப்பாளர்களினால் தயாரிக்கப்பட்டு அமைச்சர் முலாபரிடம் கையளிக்கப்பட்ட அறிக்கை இமாலயப் பிரகடனம் வெளியிடப்பட்ட பிறகு ஒரு வருடத்துக்கும் அதிகமான காலமாக நாடு பூராவும் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களில் பங்கேற்ற மதத்தலைவர்கள், சவில் சமூகம் மற்றும் கல்விச் சமூகத்தைச் சேர்ந்தவர்களினால் வெளிப்படுத்தப்பட்ட உணர்வுகளை சுருக்கிக் கூறுவதாக அமைந்திருக்கிறது.

சிறப்பானதும் நீதியானதுமான ஒரு இலங்கையை கட்டியெழுப்புவதற்காக அரசியலமைப்புச் சீர்திருத்தங்களில் கவனம் செலுத்தும் அரசியல் சீர்திருத்தங்கள், கடந்த காலத்தைக் கையாளும் நிலைமாறுகால நீதி, சமத்துவமான பாதுகாப்பும் சமத்துவமான உரிமைகளும், மலையக தமிழர்கள் இன்றுவரை அனுபவித்துவருகின்ற வரலாற்று ரீதியான அநீதிகள், சட்டத்தின் ஆட்சி மற்றும் அரச நிறுவனங்களை பலப்படுத்தும் நல்லாட்சி முறை ஆகிய ஐந்து பிரிவுகளை உள்ளடக்கிய இமாலயப் பிரகடனத்தை மேம்படுத்தும் நோக்குடனானதாக அறிக்கை இருக்கிறது.

**மேலும் கலந்துரையாடல்கள்**

ஒரு தொடர் நடவடிக்கையாக, இந்த மகாநாட்டை கூட்டிய அமைப்புகள்



இணங்கிக் கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களை நடைமுறைப் படுத்துவதற்கு அரசியல் கட்சிகள் மத்தியில் ஆதரவை பெறுவதற்காக அவற்றுடன் கலந்தாலோசனை நடத்துவதற்கும் உத்தேசம் கொண்டுள்ளன. பதவியில் இருந்த அரசாங்கங்கள் இனநெருக்கடிக்கு தீர்வைக் காண்பதற்கு முன்னெடுத்த முயற்சிகள் தோல்வியடைந்த வரலாற்றுக்கு காரணம் அந்த முயற்சிகளை முறியடிப்பதில் எதிர்க்கட்சிகள் வகித்த நேர்மறையான பாத்திரமேயாகும்.

அதனால், இந்த தடவை எதிர்க் கட்சிகளின் இணக்கத்தை பெறுவதற்கு அரசாங்கம் பாடுபடவேண்டியது அவசியமாகும். அந்த பணிக்கு உதவுவதற்கு சிவில் சமூகம் தயாராயிருக்கிறது.

அண்மையில் நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் இன, மத சிறுபான்மைச் சமூகங்களிடம் இருந்து குறிப்பாக தமிழர்களிடமும் முஸ்லிம்களிடமும் இருந்து அரசாங்கம் ஆதரவைப் பெற்றிருக்கிறது. அதனாலேயே இன, மத சிறுபான்மைச் சமூகங்கள் பெரும்பான்மையினராக வாழ்கின்ற வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள எட்டு மாவட்டங்களில் ஏழு மாவட்டங்கள் உட்பட நாடுபூராவும் அரசாங்கத்தினால் பெரு வெற்றியைப் பெறக்கூடியதாக இருந்தது.

தங்களது பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வடக்கிலும் கிழக்கிலும் உள்ள வாக்காளர்கள் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்ற கருத்து மகாநாட்டு கலந்துரையாடலில் வெளிப்படுத்தப்பட்டது." தரகர்கள்" ஊடாக இல்லாமல் பிரச்சினைகளை அரசாங்கம் நேரடியாகவே தீர்த்துவைக்க வேண்டும் என்று வடக்கு, கிழக்கு மக்கள் விரும்புகிறார்கள் என்று இந்த [illegible] பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கல்விமான் ஒருவர் வர்ணித்தார்.

ஆனால், முறைமை மாற்றத்துக்காக மக்களினால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தினால் நியமிக்கப்படுகின்ற அமைப்புக்களில் தமிழர்களும் முஸ்லிம்களும் உள்டக்கப்பட வேண்டியது முக்கியமானதாகும். சமூக, சுற்றுச்சூழல் மற்றும நெறிமுறை விழிப்புணர்வின் ஊடாக பெருமளவுக்கு முற்போக்கான அந்தஸ்து கொண்டதாக சமூகத்தை மேம்படுத்தும் இலக்குடன் ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்கவினால் ஆயுதப்பபடைகளின் தலைவர்களை உள்ளடக்கி அண்மையில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணியில் ஒரு தமிழரோ அல்லது முஸ்லிமோ இல்லை.

அந்த செயலணி 18 உறுப்பினர்களைக் கொண்டது. ஆனால், அதில் தமிழரோ முஸ்லிமோ கிடையாது. இலங்கை பல இனத்தவர்களும் பல மதங்களைச் சேர்ந்தவர்களும் வாழ்கின்ற ஒரு சமுதாயம் என்ற அடிப்படையில், தற்போது கையாளப்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பில் பெருமளவுக்கு முழுமைவாய்ந்த கருத்துக்களை செயலணி பெறுவதற்கு தமிழர்களும் முஸ்லாகம்களும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டியது அவசியமானதாகும்.

முன்னோக்கிப் பார்த்தல் பாரம்பரியமான தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகளின் அணுகுமுறைகளில் நம்பிக்கை இழந்ததன் விளைவாகவே இடைத்தரகர்களன் ஊடாக இல்லாமல் தங்களது பிரச்சினைகளை அரசாங்கம் நேரடியாக தீர்க்கவேண்டும் என்று தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் விரும்புகிறார்கள். அவர்களின் பிரச்சினைகள் தொடர்ந்து நீடிக்கின்றன. அவை தீர்க்கப்பட வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். மலையக தமிழ் மக்களின் நிலைவரம் ஒரு பொருத்தமான உதாரணமாகும்.

நாடு சுதந்திரமடைந்த உடனடியாகவே மலையக தமிழர்கள் தங்களது குடியுரிமையை இழந்தார்கள். அந்த பாகுபாடான நடவடிக்கையின் விளைவாக மலையக தமிழ் மக்கள் தொடர்ந்து இடர்பாடுகளை அனுபவிக்கிறார்கள். அவர்கள் இன்னமும் லயன் அறைகளிலேயே வசிக்கிறார்கள். தங்களுக்கு சொந்தமானது என்று கூறிக்கொள்வதற்கு அவர்களுக்கு ஒரு வீடோ அல்லது நிலத்துண்டோ கிடையாது. சொந்தமாக அவர்கள் வீடுகளை கட்டிக்கொள்வதற்காக ஏழு பேர்ச் நிலத்தை வழங்குவதற்கு முன்னைய அரசாங்கம் எடுத்த கொள்கைத் தீர்மானம் இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களைப் பொறுத்த வரையிலும் கூட இதே நிலைமைதான். அவர்களில் சிவர் பல வருடக்களாக தங்களது காணிகளை இராணுவத்திடம் இழந்து நிற்கிறார்கள். அந்த காணிகள் இன்னமும் அவர்களிடம் திருப்பிக் கையளிக்கப்படவில்லை. சிலர் தங்களது பிள்ளைகளை இழந்தார்கள். அந்த பிள்ளைகளில் சிலர் பெற்றோரினால் இராணுவத்திடம் கையளிக்கப்பட்டனர் என்ற போதிலும் கூட அவர்கள் எங்கே இருக்கிறார்கள், அவர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியாது.

மிகவும் அடிப்படையான மட்டத்தில் நோக்குகையில், தமிழும் அரசகரும மொழி என்று அரசியலமைப்பில் கூறப்பட்டிருக்கின்ற போதிலும் கூட, தமிழ் பேசும் மகமகள் அரசாங்கத்திடமிருந்து உத்தயோகபூர்வ தொடர்புகளை சிங்கள மொழியிலேயே தொடர்ந்தும் பெற்று வருகிறார்கள். புராதன மதவழிபாட்டு தலங்கள் தொடர்பான பிரச்சினை மிகவும் அண்மைக் காலத்தில் பெரும் பதற்றத்தை தோற்றுவிப்பதாக அமைந்திருக்கிறது. அந்த பிரச்சினையால் சிலர் அச்சமடைந்திருக்கின்ற அதேவேளை வேறு சிலர் தாங்கள் அநீதியான முறையில் நடத்தப்படுவதாக உணருகிறார்கள்.

தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் பெரிய விடயங்களை அல்ல சிறிய விடயங்களில் இருந்து தொடங்குமாறே அரசாக்கத்தைக் கேட்கிறார்கள் என்று மகாநாட்டு கலந்துரையாடலில் ஒரு கருத்து வெளிப்படுத்தப்பட்டது. இராணுவம் கையகப்படுத்திய தனியார் நிரங்களில் சில அவற்றின் உரிமையாளய்களிடம் அரசாங்கத்தினால் திருப்பி கையளிக்க ப்பட்டிருக்கிறது. முப்பது வருடக்களுக்கும் அதிகமான காலமாக மூடப்பட்டிருந்த ஒரு வீதியையும் அரசாங்கம் மக்கள் பாவனைக்கு திறந்துவிட்டிருக்கிறது. பொலிசாரினால் துன்புத்தலுக்கு உள்ளாகாமல் நினைவேந்தலைச் செய்வதற்கான உரிமையையும் ( அது ஏற்கெனவே சட்டத்தினால் வழஙகப்பட்டிருக்கிறது) அரசாங்கம் தமிழ் மக்களுக்கு வழங்கியிருக்கிறது.

மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்கான சட்ட முன்னேற்பாடுகளையும் அரசாங்கம் செய்துவருவதாகவும் ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க அறிவித்திருக்கிறார். முன்னோக்கி எதிர்பார்ப்பதற்கு பார்ப்பதற்கு பல விடயங்கள் இருக்கின்றன. நிலைபேறான நல்லிணக்கத்தை இலங்கை அடைய வேண்டுமானால், ஆட்சிமுறையின் சகல மட்டக்களிலும் பிரச்சினைத் தீர்வுக்கு அரசாங்கம் பயன்படுத்தும் அதன் பொறிமுறைகளின் அங்கமாக சகல சமூகங்களின் உறுப்பினர்களும் இருப்பதை அரசாங்கம் உறுதிசெய்துகொள்ள வேண்டியது அவசியமானதாகும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய...

பாதுகாப்பு பற்றிய புரிதல் உள்ளதா என்ற கேள்வி எழுந்துள்ளது எனவும் அவர் கூறினார்.

தலதா மாளிகைக்கு நேற்று விஜயம் செய்து பூசை வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புலனாய்வு அமைப்புகளின் அறிக்கைகளின் அடிப்படையில் அந்த முடிவுகள் எடுக்கப்பட்டிருந்தால், புலனாய்வு அமைப்புகளின் உயர் அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அமைப்புக்கள் உட்பட தற்போதைய அரசாங்கமே விளைவுகளுக்கு பொறுப்பேற்க வேண்டும்.

அத்தோடு, ராஜபக்ஷக்கள் எப்போதும் இந்நாட்டின் இயல்புக்கு ஏற்ப தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தரப்பினர் - என்றார். (அ)

## கச்சதீவு...

தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான மீனவப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டுமாயின் கச்சத்தீவு இந்தியாவினால் கையகப்படுத்தப்பட வேண்டும் என அந்தப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கட்சியின் தலைவரும், தமிழக முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தலைமையிலான கட்சி இந்த தீர்மானத்தை செயற்குழுவில் ஏகமனதாக நிறைவேற்றியுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் பதிலளித்த அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ-

இந்திய அரசியல் கட்சியொன்று இந்தப் பிரேரணையை நிறைவேற்றியுள்ள போதிலும், இந்திய மத்திய அரசாங்கம் இது தொடர்பில் இலங்கைக்கு எந்தவொரு யோசனையையும் சமர்ப்பிக்கவில்லை.

எனினும், இந்திய மத்திய அரசு அப்படி ஒரு பிரேரணையை முன்வைத்தால், அது குறித்து விவாதிக்கத் தயார்- என்றார். (அ)

## இலங்கை...

பொருளாதார அபிவிருத்தி மற்றும் மாகாண மக்களின் சமூக வலுவூட்டல் என்பன இத்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதன் நோக்கங்களாக குறிப்பிடப்பட்டுள்ளன.

இதன்படி, கல்விக்காக 315 மில்லியன் ரூபாவும், சுகாதாரத்திற்காக 780 மில்லியன் ரூபாவும், விவசாயத்திற்கு 620 மில்லியன் ரூபாவும், மீன்பிடித்துறைக்கு 230 மில்லியன் ரூபாவும் உட்பட 33 திட்டங்களுக்கு 2371 மில்லியன் ரூபாவை வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இலங்கை அரசின்...

கொல்லப்பட்டோர் மற்றும் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டோருக்கு நீதி வழங்கவேண்டும் என்றும் தொடர்ச்சியாக வலியுறுத்தி தமக்கான ஆதரவை வெளிப்படுத்தி வரும் கனடாவுக்கு சிறிதரன் நன்றி தெரிவித்தார்.

அத்தோடு கடந்த 2022 ஆம் ஆண்டு தமிழர்களுக்கு ஆதரவாக கனேடிய பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முக்கிய காரணமாக இருந்த ஹரி ஆனந்தசங்கரிக்கும் அவர் தனது நன்றியை வெளிப்படுத்தினார்.

மேலும், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு, மனித உரிமை மீறல்களுக்கான நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பன சார்ந்து அடுத்தகட்டமாக முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் மற்றும் அரசியல் நகர்வுகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (அ)

# பிரதம கொறடாவாக சிறுபான்மையின பிரதிநிதியை நியமிக்காத எதிர்க்கட்சி!

## சாடுகின்றார் அமைச்சரவை பேச்சாளர்

கொழும்பு, டிசெ. 25

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா பதவிக்கு சிறுபான்மை பிரதிநிதியொருவரின் பெயரைக் கூட பரிந்துரைக்காத ஐக்கிய மக்கள் சக்திக்கு "கிளீன் சிறீலங்கா" வேலைத்திட்டத்தில் சிறுபான்மையினர் உள்வாங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைப்பதற்கு தகுதியில்லை. அது முழு இலங்கையருக்குமான வேலைத்திட்டம் என்பதால் இன, மத பேதமின்றி எவரும் அதில் இணையலாம் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற போது அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

'கிளீன் சிறீலங்கா' வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்காக 18 பேர டங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு படை உள்ளிட்ட துறையுடன் தொடர்புடையோர் அக்குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர். ஜனவரியில் இக்குழுவின் சில வேலைத்திட்டங்கள் ஆரம்பமாகும்.

ஓரிரு மாதங்களுக்கு அல்லது ஒரு வருடத்துக்கு மாத்திரமின்றி ஜனாதிபதியின் கண்காணிப்பின் கீழ் நீண்டகால வேலைத்திட்டமாக இதனை முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

'கிளீன் சிறீலங்கா' என்ற வேலைத் திட்டம் அனைத்து இலங்கையர்களுக்கு மானது. எனவே இதற்காக நியமிக்கப்பட்ட குழுவில் மதம் அல்லது இனங்களுக்கு முக்கியத்துமளிப்பதற்கு நாம் எதிர்பார்க்கவில்லை. அந்த அடிப்படையில் இதற்கான குழுவை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுமில்லை. எனவே இந்த வேலைத்திட்டத்தில் எவருக்கும் இணைய முடியும்.

எனவே இந்த விடயத்தில் இதற்காக இனம் மற்றும் மதத்தை ஐக்கிய மக்கள் சக்தி முன்னிலைப்படுத்துகிறது என்பது எமக்கு தெரியாது.

பாராளுமன்றத்தில் பிரதம கொறடாவாக சிறுபான்மை இனத்தவர் ஒருவரது பெயரை பரிந்துரைக்காத ஐக்கிய மக்கள் சக்தி எவ்வாறு அரசாங்கத்தின் மீது இவ்வாறானதொரு குற்றச்சாட்டை முன்வைக்க முடியும்? அக்கட்சிக்கு இவ்வாறான குற்றச்சாட்டை முன்வைக்க தகுதியில்லை - என்றார். (அ)

## யாழ்...

வெளிநாடு செல்ல முயற்சிப்பதால் கடவுச்சீட்டை பெற்றுக்கொள்வதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

உலகத்திற்கு எடுத்துக்காட்டாக இன,ஐக்கியத்துடன் கூடிய புதிய கடவுச்சீட்டு ஒன்றை உருவாக்கி வெளியிட்டுள்ளோம்.

கடவுச்சீட்டை இலகுவாகப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

வெகுவிரைவில் யாழ்ப்பாணத்தில் கடவுச்சீட்டு மற்றும் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மக்கள் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கு செல்வதற்கு அதிக பணம் செலவழிப்பதுடன் சில முகவர்களால் ஏமாற்றப்படுகின்றனர் - என்றார். (அ-5)

## பாதாள...

அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் என்ற வகையில், பாதாள குழுவை போதைப்பொருள் கடத்தலையும் எதிர்த்துப் போராடுவதற்கு நாங்கள் அர்ப்பணிப்புடன் இருக்கிறோம். ஆனால் ஊடக கண்காட்சிக்காக இரண்டு வார நடவடிக்கைகளில் செய்ய எதிர்பார்க்கவில்லை.

இதில் பாதுகாப்பு படையினர் படிப்படியாக தலையிட்டு வருகின்றனர். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று மட்டும்தான் சொல்ல முடியும். அதன் முடிவுகளை பார்க்க முடியும் - என்றார். (அ)

## மிகப்பெரிய...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்யும் தேவை ஏற்பட்டது. அதன் அடுத்த கட்ட நிதியைப் பெறுவதற்காக கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒரிரு தினங்களுக்கு முன்னர் புரிந்துணர்வு செய்துகொள்ளப்பட்டது.

எனினும் அந்த ஒப்பந்தத்தில் மாற்றங்களை ஏற்படுத்தப் போவதாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க உள்ளிட்ட தேசிய மக்கள் சக்தியினர் கூறிவந்தனர். தேர்தலில் வெற்றி பெறுவதற்காக பொய்யுரைத்தனர்.

எனினும் அதில் முக்கியமான எந்தவொரு மாற்றத்தையும் செய்ய முடியாது என நாம் ஏற்கனவே தெரிவித்திருந்தோம். அந்த ஒப்பந்தம் இப்போதும் தொடர்கிறது.

ஆகவே, மிகப் பெரிய பொய்யைக் கூறி தற்போதைய அரசாங்கம் ஆட்சிய மைத்துள்ளது என்பது தெளிவாகிறது. - என்றார். (அ)

# மகிந்தவின் பாதுகாப்பு நீக்கம் அரசியல் பழிவாங்கல் செயலே!

## பொதுஜன பெரமுன சாடல்

கொழும்பு, டிசெ. 25

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது மகன் நாமல் ராஜபக்ஷ ஆகியோருக்கு உயிரச்சுறுத்தல் இருப்பதாக புலனாய்வுப் பிரிவு அறிக்கை சமர்ப்பித்துள்ள நிலையில் இராணுவ பாதுகாப்பு அரசியல் பழிவாங்கலுக்காகவே நீக்கப்பட்டுள்ளது. மகிந்த ராஜபக்ஷவுக்கு பாதுகாப்பு வழங்குவது ஒவ்வொரு பிரஜையினதும் கடமையாகும் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று செவ்வாய்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட இராணுவ பாதுகாப்பு முழுமையாக நீக்கப்பட்டமை முறையற்றதொரு செயற்பாடாகும். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இன்று பாதுகாப்பு ஏதுமின்றி மக்கள் மத்தியில் செல்வதற்கான சூழலை மகிந்த ராஜபக்ஷவே ஏற்படுத்திக் கொடுத்தார் என்பதை மறந்து விடக்கூடாது.

இராணுவத்தினர் தமது சொந்த ஊர்களுக்கு சவப்பெட்டியில் செல்லும் யுகத்தை மகிந்த ராஜபக்ஷவே முடிவுக்கு கொண்டு வந்தார். ஆகவே அவருக்கு




பாதுகாப்பு வழங்குவது ஒவ்வொரு பிரஜைகளினதும் தலையாய கடமையாகும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும், பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷக்ஷவுக்கும் உயிரச்சுறுத்தல் காணப்படுவதாக புலனாய்வுப் பிரிவு அறிக்கை சமர்ப்பித்துள்ள நிலையிலும் இராணுவ பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளமை முறையற்றதொரு செயற்பாடாகும். இதனை அரசியல் பழிவாங்கலாகவே குறிப்பிட வேண்டும்.

தேர்தல் மேடைகளில் குறிப்பிட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாக குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கம் முறையற்ற வகையில் செயற்படுகிறது. அரச வரப்பிரசாதங்களை பயன்படுத்துவதில்லை என்று குறிப்பிட்ட ஆளும் தரப்பினர் அரச சிறப்புரிமைகளை முழுமையாக பயன்படுத்துகிறார்கள். நாட்டு மக்கள் வெகுவிரைவில் உண்மையை விளங்கிக் கொள்வார்கள் - என்றார். (அ)

## சுகாதார...

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு, அமைச்சரவை பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுகாதார சேவைகளைப் பெறுவதற்கான உரிமையை அடிப்படை உரிமையாக்க வேண்டுமாயின் அதற்கு அவசியமான ஒழுங்குகளை ஏற்படுத்தவேண்டும்.

தற்போது, அரசாங்கம் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.

அதன் நிறைவில் மக்கள் தங்களுக்குத் தேவையான இடங்களில் தமக்கான சுகாதார சேவைகளைப் பெற முடியும் என்ற உறுதிப்பாட்டினை அரசாங்கத்தினால் வழங்க முடியும்.

அதற்கான ஆரம்பக்கட்ட பணிகளை சுகாதார அமைச்சு தற்போது ஆரம்பித்துள்ளது - என்றார். (அ)

## இந்த வருடத்தில்...

நடவடிக்கையின் போது குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த மீனவர்களுடன் இந்த வருடத்தினுள் 72 மீன்பிடி படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டதாக இலங்கைக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (அ)

## அரிசி...

அமைச்சருமான கலாநிதி நளிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்தார்.

சந்தையில் நிலவும் அரிசி பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் வகையில் கடந்த 20 ஆம் திகதி வரை அரிசியை இறக்குமதி செய்ய தனியார் மற்றும் அரச இறக்குமதியாளர்களுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியிருந்தது.

இதன்போது, மொத்தமாக 67,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## தலைமன்னார் கடற்பரப்பில் 17 இந்திய மீனவர்கள் கைது!

மன்னார், டிசெ. 25

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 17 இந்திய மீனவர்கள் நேற்று அதிகாலை தலைமன்னாருக்கு அருகில் கைது செய்யப்பட்டுள்ளதாக, கடற்படையினர் தெரிவித்தனர்.

இதன்போது 2 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக் கடற்படை பேச்சாளர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட 17 மீனவர்களும் விசாரணைகளின் பின்னர், மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர். (அ)

## அமைச்சர்கள் கருத்து கூற தடை விதிக்கப்படவில்லை!

### அமைச்சரவைப் பேச்சாளர்

கொழும்பு, டிசெ. 25



அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் அமைச் சர்கள் கருத்து வெளியிடுவதற்கு எவ்வித தடையும் விதிக்கப்படவில்லை என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அமைச்சர்கள் தமது கருத்தை சுதந்திரமாக வெளியிடலாம். அதற்கு எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை.

எனினும் அமைச்சுகளின் தீர்மானங்களை அறிவிப்பதற்கு முறையான பொறிமுறையொன்றை உருவாக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

குறிப்பாக அரசாங்கம் மற்றும் அமைச்சரவையின் தீர்மானங்கள் தொடர்பில் நான் ஊடகங்களுக்கு தெளிவுபடுத்துகிறேன். அதேபோல அமைச்சுகளின் செயற்பாடுகள், தீர்மானங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும். அதற்காகவே பொறிமுறையொன்று அவசியமாகிறது.

எதிர்காலத்தில் அந்த நடவடிக்கை ஒழுங்கமைக்கப்படும் - என்றார். (அ)

## 389 கைதிகளுக்கு பொது மன்னிப்பு!

கொழும்பு, டிசெ. 25

389 கைதிகள் விசேட பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட உள்ளதாக சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்களில் நால்வர் பெண் கைதிகள் என்று தெரிவிக்கப்படுகிறது. (அ)

## மேல் மாகாண ஆசிரியர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கம்

கொழும்பு, டிசெ. 25

மேல் மாகாணத்தில் பாடசாலை ஆசிரியர்களுக்கு தனியார் கல்வி வகுப்புகளை நடத்துவதை மட்டுப்படுத்தி மாகாண கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை நடைமுறைப்படுத்துவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மேல் மாகாண ஆளுநரின் பணிப்புரைக்கு அமைய சுற்றறிக்கையை அமுல்படுத்துவது இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை, மேல் மாகாணத்தில் உள்ள பாடசாலை ஆசிரியர்கள் தமது பாடசாலைகளில் மாணவர்களுக்கான கட்டணக் கல்வி வகுப்புகளை நடத்துவதற்கு தடை விதித்து மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

சுற்றறிக்கைக்கு ஆட்சேபனைகள் எழுந்ததையடுத்து அதனை நடைமுறைப்படுத்துவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டதாக தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார். (அ)

# அரிசியை விநியோகிக்கும் செயல்பாடுகளில் சிக்கல்!

### விரைவில் நிவர்த்தி செய்ய நடவடிக்கை என்கிறார் அமைச்சரவைப் பேச்சாளர்

கொழும்பு, டிசெம்பர் 25

**நாட்டில் அரிசி விநியோக செயல்பாடுகளில் சிக்கல்கள் இருப்பதை ஏற்றுக்கொள்வதாக, அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது, அரசாங்கம் அரிசியை இறக்குமதி செய்ய நடவடிக்கைகளை எடுத்துள்ள போதிலும் இன்னமும் சந்தையில் அரிசிக்கு பாரிய பற்றாக்குறை நிலவுவதாக ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தியாவிலிருந்து அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ள போதிலும் விநியோக செயற்பாடுகளில் சிக்கல்கள் உள்ளன. அதனை நாம் ஏற்றுக்கொள்கிறோம். அந்தப் பிரச்னையை நிவர்த்தி செய்ய விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

எழுபதாயிரம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதியளித்திருந்தது. சதொச மற்றும் அரச பல்நோக்குக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக அரிசியை இறக்குமதி செய்வதில் ஏற்பட்ட சில சிக்கல்கள் காரணமாக தனியார் துறையினருக்கும் அரிசி இறக்குமதிக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அரசு எதிர்பார்த்த தொகை இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

ஆயினும் அரிசியை விநியோகிக்கும் முறையில் சில சிக்கல்கள் காணப்படுகின்றன. அரச தலையீட்டுடன் விரைவாக அனைத்து வர்த்தக நிலையங்களிலும் அரிசியை நுகர்வோர் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். தனியார் துறையில் அரசாங்கத்தால் நேரடியான சில தலையீடுகளை மேற்கொள்ள முடியாத நிலையும் காணப்படுகிறது. - என்றார். (அ)

# இலங்கை - இந்திய மீனவர் விவகாரம் தமிழ் எம்.பிக்கள் தலையிடவேண்டும்

### மீனவர் சங்கப் பிரதிநிதிகள் அழைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 25

இலங்கை ஜனாதிபதியின் முதலாவது உத்தியோகபூர்வ இந்திய விஜயத்தின் போது, இரு நாடுகளுக்குமிடையிலான கடற்றொழிலார் பிரச்சினை தொடர்பாக எடுக்கப் பட்ட கலந்துரையாடல்கள் மற்றும் தீர்மானங்கள் குறித்து நாட்டுக்கு தெளிவான தகவல்கள் வழங்கப்படாமையால், வடபகுதி மீன வர்கள் தமது வாழ்வாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் தொடர்ந்தும் நீடிக்குமெனக் கவலையடைந்துள்ளனர்.

எனவே தமிழ்நாட்டு முதல மைச்சருடன் இணைந்து இந்தப் பிரச்னைக்கு அமைதித் தீர்வை எட்டுவதற்கு வடக்கிலுள்ள தமிழ் மக்கள் பிரதிநிதிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மீனவர் தலைவர்கள் வலியுறுத்துகின்றனர்.

வடமாகாண மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்னைகள் தொடர்பில், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல் லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட் டங்களின் கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் வட மாகாண ஆளுநர் ஆகியோ ருக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊட கங்களுக்கு கருத்து வெளியிட்ட வடமராட்சி வடக்கு மீனவர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் முன்னாள் தலைவர் நா. வர்ணகுலசிங்கம், இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைந்து மீன் பிடியில் ஈடுபடுவார்களோ என்ற கவலை வடக்கு மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதி இந்த விடயத்தை மனிதாபிமான அடிப்படையில் அணுகுவோம் என்ற வகையிலான கருத்து வெளியிட்டு வந்துள்ளார். ஆனால் அங்கு என்ன பேசப்பட்டது, கலந்துரையாடப்பட்ட விடயங்கள் எவை என்பது குறித்து அறிக்கைகள் எதுவும் வெளியிடப்படவில்லை. எனவே நாம் என்ன நினைக்கிறோம் என்றால், மனிதாபிமான காரணங்கள் எனக் கூறி அவர்கள் மீண்டும் எங்கள் கட லுக்கு வருவார்களோ என்ற கவலை எமக்கு ஏற்பட்டுள்ளது. இது குறித்து ஆளுநரிடம் தெரிவித்துள்ளோம். இது தொடர்பாக அமைச்ச ரிடம் பேசுவதாக குறிப்பிட்டார்.

எங்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற, வட மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நான்கு மாவட்டங்களினதும் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் நாம் தயவாக கோரிக்கை விடுக்கின்றோம். இந்த மீனவர் பிரச்னையை சுமூகமாகவும் ஒற்றுமையாகவும் நல்லெண்ணத்துடன் தீர்க்க மீனவர் சமூகம் தயாராக இருக்கின்றது. தமிழக முதலமைச்சருக்கு எழுத்து மூலமாக பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனாக இருக்கலாம் கஜேந்திரகுமார் பொன்னம்பலமாக இருந்தா லும் சரி, ரவிகரனாக இருந்தாலும் சரி, செல்வம் அடைக்கலநாதனாக இருந்தாலும் சரி உங்கள் கடிதத் தலைப்பில் தமிழ முதலமைசசருக்கு எழுத்து மூலம் மீனவர்களின் பிரச் னைகளை மாத்திரமன்றி பிரச்னையை சுமூகமாக தீர்ப்பதற்கு தயார் என்பதை அறிவியுங்கள்.

இந்திய மீனவர்களால் இந்நாட் டில் உள்ள ஐம்பதாயிரம் மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு வடக்கிலுள்ள தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தலையிட வேண்டும் - என்றார். (அ)

## ஜனாதிபதி நிதியத்தில் முறைகேடா? விசாரணைகளை ஆரம்பித்த சி.ஐ.டி!

கொழும்பு, டிசெ. 25

கடந்த காலங்களில் ஜனாதிபதி நிதியத்தில் ஏதேனும் முறைகேடு நடந்துள்ளதா என்பதைக் கண்டறிய குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பதில் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரையின் பேரில் குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஆளுங்கட்சியின் பிரதம அமைப்பாளரான அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, ஜனாதிபதி நிதியத்திலிருந்து பணம் பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் பெயர் பட்டியலை பாராளுமன்றத்தில் வெளியிட்டிருந்த நிலையில், குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

## மருந்தாளர்களுக்கு வெற்றிடம்!

கொழும்பு, டிசெ. 25

மருந்தாளர்களுக்கான வெற்றிடம் நிலவுவதாக தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கத்தின் கொழும்பு மாவட்டத் தலைவர் ஹேமந்த விஜேசேகர ஊடகங்களுக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாடளாவிய ரீதியில் சட்ட ரீதியாக மருந்தகங்களை முன்கொண்டு நடத்துவதற்கு பாரியளவில் மருந்தாளர்களுக்கான வெற்றிடம் நிலவுகின்றது.

அந்த நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில் கூடிய விரைவில் மருந்தாளர்களை உள்ளீர்ப்பதற்கான செயற்றிட்டத்தை முன்னெடுக்கவேண்டிய தேவை எழுந்துள்ளது. இதன் காரணமாகவே அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளோம்.

அத்துடன், குறித்த துறையுடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களுடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகின்றோம்.

எதிர்காலத்தில் உரிய முறையில் மருந்தகங்களை நடத்துவதற்கான இயலுமை ஏற்படுத்தப்படுமென கருதுகின்றோம்.

இந்தநிலையில் உரிய பயிற்சியுடன் கூடிய மருந்தாளர்களை உள்ளீர்ப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.12.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org